

Vol.22 | No. 9 | September 2018

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

## Feast of Nativity of Bl. Mother Mary





Vianney Day - Minor Seminary
04.08.2018



Vellampi Mission Visit
12.08.2018



TCYM, Leaders' Training
Kalluvilai, 11.08.2018

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 22 No :9 SEPTEMBER 2018

# இறையருள்
# IRAIARUL



Editorial Board

*Patron*
**His Excellency**
**Mar George Rajendran SDB**

*Chief Editor*
**Fr. Joseph Santhosh**

*Executive Editor*
**Mr. Soundara Raj**

*Associate Editors*
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**

Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:
**Berlin Athencod**

Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| ஆயர் சுற்றுமடல் | 06 |
| மறைக்கல்வி | 15 |
| Birthdays and Feastdays | 18 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 19 |
| சிறுமலர் இயக்கம் | 20 |
| இளையோர் இயக்கம் | 22 |
| வின்சென்ட் தே பவுல் | 25 |
| இல்வாழ்வு இயக்கம் | 27 |
| சமூக சேவை சங்கம் | 29 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 32 |
| சீனாய் தியான இல்லம் | 33 |
| மறைமாவட்ட கல்வி நிறுவனம் | 34 |
| திருத்தொண்டு நிலையம் | 37 |
| மறைவட்டச் செய்திகள் | 39 |
| மறைமாவட்டச் செய்திகள் | 43 |
| Bishop's Engagements | 44 |

Bishop George Rajendran SDB
*Diocese of Thuckalay*

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250833
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/85/2018 31 August 2018

Dears,

In the month of September, we celebrate one of the important feasts of Blessed Virgin Mary. The Nativity of Mother Mary falls on 8 September. The Gospel writers have not transmitted to us anything about the birth of Virgin Mary. Their attention is completely centred on the mystery of Christ and his salvific mission. The only documented source that we have is the Proto-evangelium of James, an apocryphal gospel written towards the end of the second century. From the Proto-evangelium of James (5:2), we learn about the birth of Mary and the names of Mary's parents, namely, Joachim and Ann. It also speaks about the tradition that the couple was childless until an angel appeared to Ann and told her that she would conceive. Though the work has no historical value, it reflects a long held belief in the eastern and western Churches.

**Origin of the Feast**

The origin of the Feast is to be sought in Palestine. It goes back to the consecration of a church in Jerusalem, which tradition identifies as the present Basilica of St Ann. In Rome, the Feast began to be kept towards the end of the 7th century. Gradually, it spread to the other parts of the Western Church. From the 13th century onwards, the celebration assumed notable importance and it became a Solemnity with an Octave and a Vigil. The Octave is celebrated as fast. The traditional date of the feast, 8 September, falls exactly nine months after the feast of the Immaculate Conception of Mary.

**Importance of the Feast**

In the case of Saints, the Church commemorates their birthdays on the days of their return to the Lord. However, in the cases of St John the Baptist and Blessed Virgin Mary, the Church also celebrates the days of their earthly birth. The reason for this is not because of the greatness or the privileges of the persons involved but because of the singular mission that they undertook in the History of Salvation. The birth of the Blessed Virgin is to be considered - like that of St John the Baptist - in direct relationship with the coming of the Saviour into the world. Thus, the birth and existence of Mary take on a new significance that transcends her own

person. It is explained solely in the context of the History of Salvation. Mary's birth lies at the confluence of two Testaments - bringing to an end the stage of expectation and the promises, and inaugurating the new times of grace and salvation in Jesus Christ.

Mary, the Daughter of Zion and ideal personification of Israel, is the last and worthiest representative of the People of the Old Covenant but at the same time she is "the hope and the dawn of the whole world." With her, the times are fulfilled and a new economy is established (LG 55). The birth of Mary is ordained particularly towards her mission as Mother of the Saviour. Her existence is indissolubly connected with that of Christ. She partakes in the unique plan of grace. God's mysterious plan regarding the incarnation of the Word embraces also the Virgin who is His Mother. In this way, the birth of Mary is inserted at the very heart of the History of Salvation.

It is a fact that every human birth is a call for new hope in the world. This is true in a magnificent way in the case of Mary. If Jesus has brought the fullness of salvation, Mary is its dawn. Next to the birth of Jesus, Mary's birth offers greatest possible happiness to the world. Each time we celebrate her birth, we can confidently hope for an increase of peace in our hearts and in the world at large.

**Eight Days of Lent**

As the spiritual preparation to the feast of the Nativity of Mary, in our Church we have the custom of observing the Ettu Noyambu or eight days of Lent beginning from 1 September and ending on 8 September with special prayers in honour of Our Lady. During this period, we are expected to recite rosaries, undertake charitable activities, etc. This year we have special intentions. On 13 August 2018, an Inter-Eparchial meeting was held at Pala in order to discuss the pastoral coordination of various departments among the Eparchies which come under the Archdiocese of Changanacherry. Archbishop, Bishops and representative from the four Eparchies, namely, Changanacherry, Kanjirapally, Pala and Thuckalay, participated in this meeting. During the meeting, it was decided to celebrate the eight days of Lent for two major intentions: to pray for the State of Kerala where our brothers and sisters are suffering due to the great deluge and to pray for the Church in India, which is going through great sufferings due to the rising fundamentalism and intolerance.

I request you, dear Fathers, to instruct all our faithful to focus on the spiritual renewal of the Church both at the personal level and at the parish level. At the parish lev-

el, I request you, to conduct adorations, recitation of rosaries, and Holy Qurbana during these days. Kindly instruct the faithful to have daily meditation of the Word of God, to make a good Confession, to participate daily in the Holy Qurbana, to have some devotions to Mother Mary, to engage in charitable activities, to undertake fasting and to practise some forms of penance. I suggest that these eight days be spend just as we spend the days of major Lenten season. The Eparchy has given concrete directions as to how to coordinate the eight days of Lent at parish level below.

**Heavy Floods in Kerala and Thuckalay's Response**

The State of Kerala is facing the region's worst deluge of the century. I was happy that our Eparchy was able to participate and share in the sufferings of our brethren by offering our unending prayers and providing relief materials in the early stages of the floods. The torrential rains accompanied by flooding and landslides, caused loss of lives, displacement of people and extensive damages to houses and property. Over 400 people lost their lives, more than 7.8 lakh people lived in relief camps, more than 10,000 houses were washed away and around 30,000 houses were partly damaged. Many areas in Kerala continued to receive heavy downpour for many days hampering rescue works.

Among the victims, we have the families and relatives of priests, nuns and brothers working in our Eparchy. I thank whole heartedly, all of you, dear Fathers, for your prayers and generous contributions to support the victims of floods. On 12 and 19 August 2018, at Eparchial level, we collected the Sunday offerings. Our schools and institutions have generously come forward to support the cause. Again on 19 and 20 August we were able to collect various articles such as food, clothing, stationery items, fruits, vegetables, bakery items, etc. I could feel the active and generous participation of Eparchial community - priests, nuns, brothers, members of pious associations, departments, School children, etc. in providing materials for the people of Kerala. We sent all these materials to parts of Idukki, Changanacherry and Kuttanad. I was able to witness the genuine love that our people exhibited during these days. Even a one-rupee coin that was collected became valuable. I appreciate all the initiatives that the priests, nuns and the faithful took in order to help Kerala in this moment of crisis. Let us continue to offer our prayers and services to the victims of flood.

A similar situation we experienced in Kanyakumari district too.

Due to heavy rainfall, all the reservoir dams were opened and some of the villages and towns were inundated. Many homes in Munchirai and Varuthattu areas were affected.

The Challenges of Indian Church

The Church is facing various kinds of persecutions and attacks in different parts of the country. We should be aware of these attacks especially when it happens through the social media. Social media is a gift of God but the filthy and unholy way of using it destroys social harmony and respect. People in a large numbers misuse the freedom of expression through the social media disregarding the sensibilities of others. The recent scandals involving priests have shaken the faith of many people. All those who are culpable need to be punished under the law of the land. Unfortunately, in the social media, instead of focusing on specific issues, some are attacking the whole institution. It could be part of a hidden agenda to tarnish the image of Christianity.

I suggest that during the eight days of Lent, let us keep the following spiritual practices and pray for the twin intentions that we have proposed.

- From 1-6 September, let the parishes organize rosary services, benediction and Holy Qurbana.
- On 7 September, the parishes can have a long period of adoration. This could be followed by rosary and Holy Qurbana.
- On 8 September, let us celebrate the birthday of Bless Virgin with due solemnity.

May our Blessed Mother intercede for the suffering people of Kerala and for the Church in India!

**CONCLUSION**

During the month of August, we had come together as fellow workers of the Eparchy to celebrate the St John Maria Vianney Day. This celebration gave us an opportunity to recall our own Priesthood and to resolve to live it like St John Maria Vianney in administering the sacrament especially the sacrament of reconciliation. Let us make use of occasions such as Feasts of patron Saints of our parishes to boost the faith of our people. The Nativity of the Virgin Mary is a wonderful opportunity for it. Let us prepare our people well and celebrate it meaningfully. Kindly keep the mission of the Church and the needs of our Eparchy in your daily prayers.

With my prayers and blessings,

✠George Rajendran SDB
Bishop of Thuckalay

Bishop George Rajendran SDB
*Diocese of Thuckalay*

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

# ஆயர் சுற்றுமடல்

Circular letter No/GR/09/2018

ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!

## "நாட்டுக்காக எரிக்கோ பவனி"

இறையேசுவில் அன்புக்குரியவர்களே,

இந்திய கத்தோலிக்க அருங்கொடை இயக்கத்தின் தேசிய பொதுக்குழு, 2019 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் பாராளுமன்றப் பொதுத்தேர்தலை முன்னிட்டு, நமது நாட்டுக்காகவும், எதிர்காலத்தில் தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் நாட்டுத் தலைவர்களுக்காகவும் செபிப்பதற்காக சிறப்பான தொடர் பரிந்துரை மன்றாட்டுக்களை நாடு முழுவதும் முன்னெடுக்கப் பணித்துள்ளது.

இச்சீரிய முயற்சியின் தொடர்ச்சியாக, அகில இந்திய ஆயர் பேரவையின் ஆதரவுடன் நாடு தழுவிய "எரிக்கோ செபப் பேரணி"யை தேசியப் பணிக்குழு நடத்தி வருகிறது. தமிழக ஆயர்களின் ஆசியுடன் அனைத்து மறைமாவட்டங்களையும் வலம் வரும் இப்பேரணியானது ஜுலை 28இல் தொடங்கி ஆகஸ்ட் 18இல் நிறைவடையுறது. நமது மறை மாவட்டத்தில் எரிக்கோபேரணியானது ஆகஸ்ட் 6, 2018 திங்கள்கிழமை அன்று மாலை 4.30 மணிக்கு பிலாங்காலை புனித குழந்தை தெரேசாள் மறைவட்ட ஆலயம் வந்தடைகிறது.

தொடர்ந்து பின்வரும் கால அட்டவணைப்படி நிகழ்வுகள் நடைபெறுகிறது.

| | |
|---|---|
| மாலை 5.00 மணி | செபமாலை |
| மாலை 5.20 மணி | இறைப்புகழ்ச்சி |
| மாலை 5.40 மணி | எரிக்கோப் பவனி - ஓர் அறிமுகம் |
| மாலை 6.00 மணி | திருப்பலி - மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB |
| இரவு 7.00 மணி | எரிக்கோப் பவனி |
| இரவு 7.45 மணி | பரிந்துரை செபம் |

| | |
|---|---|
| இரவு 8.10 மணி | நற்கருணை ஆராதனை |
| இரவு 8.30 மணி | இறுதி ஆசீர், நிறைவு |

பிலாங்காலையில் வைத்து நடைபெறும் இந்நிகழ்வுகளில் அனைத்து அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும் மற்றும் தக்கலை பிலாங்காலை மறைவட்டத்துக்குட்பட்ட பங்குகளிலிருந்து அனைத்து மக்களும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு பிற பங்குகளின் பிரதிநிதிகளாக குறையாமல் 5பேர் பங்கெடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தொடர்ந்து இப்பவனியானது நமது மறைமாவட்ட அனைத்து பங்குகளிலும் பயணிக்கும். பயணத் தேதி மற்றும் நேரம் பின்னர் உங்களுக்கு அறிவிக்கப்படும். நமது மறைமாவட்ட சீனாய் தியான இல்ல இயக்குநர் அருட்தந்தை மிஜோ செபாஸ்டின் அவர்கள் தலைமையேற்று இதை வழிநடத்துவார். இதற்கு அனைத்து அருட்தந்தையர்களும், அருட் சகோதரிகளும் இறை மக்களும் ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

என்றும் ஈசோ மெசியாவில்

+மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

ஆயர் இல்லம்
01.08.2018

குறிப்பு: இந்த சுற்றுமடலை ஆகஸ்ட் 5ம் தேதி திருப்பலிக்குப்பின் உங்களுடைய பங்குகளில் வாசிக்க வேண்டும்.

## மறைமாவட்டங்களுக்கிடையேயான கூட்டம்

மறைமாவட்டங்களுக்கிடையேயான கூட்டம் ஆகஸ்டு 13 அன்று பாலாவின் பரணிங்ஙானத்திலுள்ள புனித அல்போன்சா கல்லறை அருகில் காலை 9 மணி முதல் மதியம் 1.30 மணி வரை நடைபெற்றது. சீரோ மலபார் சபைக்கு எதிராக ஊடகத்தின் தாக்கம் என்ற சிந்தனையில் இறைமக்களின் ஆன்மீக வாழ்க்கை முறைகளை சீரழிக்க ஊடகங்கள் எதிர்மறையாக செயல்பட்டு வருவதை அறிந்து உணர வேண்டும் என்றும் கூறப்பட்டது. நிறைவாக கருத்தரங்குடன் நிறைவு பெற்றது. இக்கூட்டத்தில் ஆயர்கள் மார் ஜோசப் பெருந்தோட்டம், மார் ஜோசப் கல்லரிங்காட், மார் ஜார்ஜ் இராஜேந்திரன், மார் ஜோசப் பள்ளிக்காபறம்பில், மார் டோமி தடத்தில், மார் மேத்யு முரிக்கன் ஆகியோர்களும் மறைமாவட்ட பல்வேறு துறை இயக்குநர்களும் கலந்து கொண்டனர்.

Bishop George Rajendran SDB
*Diocese of Thuckalay*

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

# கேரளா வெள்ள நிவாரண சுற்று அறிக்கை

கேரளாவில் தற்போது இயற்கை சீற்றத்தினாலும் கன மழையினாலும் ஏராளமான இடங்களில் தண்ணீர் சூழ்ந்து மக்கள் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்து தவிப்பது அனைவரும் அறிந்த ஒன்றே. அதற்காக கடந்த ஞாயிறு அன்று சிறப்பு காணிக்கை எடுக்கப்பட்டது. அனைவரும் ஒத்துழைத்தமைக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது கேரளாவில் மழையினாலும் நிலச்சரிவினாலும் ஏற்பட்ட சேதத்தினால் அங்குள்ள சூழ்நிலையானது மிகவும் பரிதாபமாக உள்ளது. வீடுகளை சுற்றிலும் தண்ணீர் சூழ்ந்துள்ளதால் மக்கள் பல முகாம்களில் தங்கவைக்கபட்டுள்ளனர். இப்பொழுது ஒருசில முகாம்களிலும் தண்ணீர் சூழ்ந்துள்ளது. பல மருத்துவமனைகளிலும் தண்ணீர் சூழ்ந்துள்ளதால் மற்ற மருத்துவமனைகளுக்கு நோயாளிகளை மாற்றி கொண்டு செல்லும் போது அங்கு சிகிச்சை அளிப்பதற்கு போதிய மருந்துகளும் மருத்துவர்களும் இல்லாத சூழ்நிலையும் உருவாகியுள்ளது. கர்ப்பிணி பெண்களும் சர்க்கரை நோயாளிகளும் பலவிதமான நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களும் போதிய மருந்துகள் கிடைக்காத காரணத்தினால் வாழ்வை இழக்கும் ஒரு அவல நிலையும் ஏற்பட்டுள்ளது. தண்ணீர் எங்கும் சூழ்ந்துள்ளதால் மின்சார வசதி இல்லை. பொருட்களை கொண்டுச் செல்லவதற்கு வாகன வசதி இல்லை. எனவே உண்பதற்கு உணவுகள் கூட இல்லாத ஒரு நிலமை தொடர்கிறது. உறங்குவதற்கு தேவையான படுக்கை விரிப்புகள் இல்லாத காரணத்தினால் உறங்குவதற்கும் கூட இயலாதநிலை நிலவுகிறது. உடுத்த உடைக்கு மாற்று உடைகள் இல்லாமல் தவிக்கும் மக்களும் ஏராளம். இப்பொழுது அவர்களுக்கு உதவி கரம் நீட்ட வேண்டிய கடமை நமக்கு உண்டு என்பதை நாம் உணா்ந்து கொள்வோம். கீழ்க்கண்ட பொருட்களை வழங்கி நாம் அவர்களுக்கு உதவி செய்ய இயலும்.

பொருட்கள்

1. மூட்டை அரிசி

2. பலசரக்கு பொருட்கள்
3. எல்லா வயதினருக்கும் ஏற்ற புதிய உடைகள்
4. படுக்கை விரிப்புகள்
5. சோப்பு (சலவை மற்றும் குளியல்), பல் துலக்க தேவையான பொருட்கள்
6. பருப்பு வகைகள் (கிலோ கணக்கில்)
7. உலர் தானியங்களும் பழங்களும்
8. ரொட்டி, பிஸ்கட் மற்றும் சிறு குழந்தைகளுக்கான சத்து உணவுகள்
9. மருந்துப் பொருட்கள் வாங்குவதற்கான நன்கொடைகள்

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்
18.08.2018

ரீமார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

குறிப்பு: இந்த சுற்றுஅறிக்கையை 19.8.2018 ஞாயிறு திருப்பலிக்கு பிறகு அறிவிப்பின் போது வாசிக்கவும்.

## மறைமாவட்ட அருட்தந்தையர்கள் தினம்

புனித மரிய வியானி திருநாளை மறைமாவட்ட அருட்தந்தையர்கள் தினமாக ஆண்டுதோறும் நமது மறைமாவட்டம் கொண்டாடி வருகிறது. அதைப்போன்று இவ்வாண்டு அருட்தந்தையர்கள் தினம் ஆகஸ்டு 4 அன்று முக்கூட்டுக்கல் இளங்குருமடத்தில் நற்கருணை ஆராதனையோடு நடைபெற்றது. ஆராதனைக்குப்பின் அருட்தந்தையர்களுக்கும் இளங்குருமட அருட்சகோதரர் களுக்குமிடையேயான நட்பு ரீதியிலான கைப்பந்துப் போட்டி நடைபெற்றது. இதில் அருட் தந்தையர்கள் அணி வெற்றி பெற்றது. தொடர்ந்து இளங்குருமட அருட்சகோதரர்கள் ஒருங்கிணைப்பில் சிறப்புக் கூட்டமும் நடைபெற்றது. நிகழ்வை இளங்குருமட அதிபர் அருட்தந்தை ஜோஷி, நிதியாளர் அருட்தந்தை சுமேஷ் மற்றும் இளங்குருமட மாணவர்கள் ஏற்பாடு செய்தனர்.



Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443261100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

# ஆயர் திருமுகம்

Pastoral Letter No/GR/35/2018 10 July 2018

ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!

சீரோமலபார்த் திருச்சபையைப் பொறுத்தவரை ஜூலை மாதம் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது. ஜூலை 3 அன்று நமது தந்தையாகிய மார்த் தோமாவின் திருநாளை சிறப்பிக்கும் நாம், 28 ஆம் தேதி புனித அல்போன்சாவின் திருநாளையும் சிறப்பிக்கிறோம்.

இத்திருமுகத்தின் வழியாக, நாம் சார்ந்திருக்கும் சீரோ மலபார்த் திருச்சபையின் முதல் புனிதையாகிய புனித அல்போன்சாவின் ஆன்மீக வாழ்வைக் குறித்த சில சிந்தனைகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள ஆசைப் படுகிறேன். நம்முடைய மறைமாவட் டத்தில், இப்புனிதையின் பெயரில் நாகர்கோவிலில் திருத்தலம் அமைந்துள்ளது என்பதும் நீங்கள் அறிந்ததே. திருவிழா நாட்களில் ஏராளமான மக்கள் இத்திருத்தலம் வந்து அன்னையின் ஆசி பெற்றுத் திரும்புகின்றனர் என்பதும் மகிழ்ச்சி தரும் ஒன்று.

இப்புனிதையின் ஆன்மீக

மானது, ஈசோ மெசியாவை மையமாகக் கொண்டிருந்தது. இயேசுவின் நிரந்தர உடனிருப்பைக் குறித்த உணர்வுநிலையே, அவருடைய ஆன்மீக வாழ்வின் அடிநாதம் என்று கூறிட இயலும். துன்பங்களை மனமார ஏற்ற அவர், அவற்றை அன்பு செய்தார். துன்புறுவதில் மனம் மகிழ்ந்தார். அகில உலக திருச்சபையில், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த குழந்தைத் தெரசா, சிறுமலர் என அறியப்படுகிறார் என்றால், நமது திருச்சபையின் முதல் புனிதை 'இந்தியாவின் சிறுமலர்' என அறியப்படுகிறார்.

பிரான்சிஸ்கன் கிளாரிஸ்ட் (FCC) சபையைச் சார்ந்த இவருடைய வாழ்க்கை பரணங்ஙானம் கன்னியர் இல்லத்தின் நான்கு சுவர்களுக்குளேயே அமைந்தது. ஆண்டவருக்கென வாழ்வை முழுமையாக அர்ப்பணித்த அவர், அவருக்குப் பணிந்து வாழ்ந்தார். இப்பணிவை அவர், உடன் வாழ்ந்த சகோதரிகளிடமும், ஆன்மீக வழிகாட்டியிடமும்,

உறவினர்களிடமும், தனது மாணவர்களிடமும் வெளிப்படுத்தினார். உள்ளறைக்குள் ஒடுங்கிப்போன வாழ்வாக இருந்தாலும், இறைச்சித்தத்திற்கு பணிந்து தன்னை முழுமையாக விட்டுக்கொடுத்து வாழ்ந்ததால் அவரிடம் வெளிப்பட்ட அருளானது பலரை அவரிடம் ஈர்த்தது. அல்போன்சாவின் புனித வாழ்வைக் குறித்து முதல் முதலாக வெளிப்படையாக கூறியவர், அவரின் ஆன்மீக வழிகாட்டியாக இருந்த அருட்தந்தை ரோமஜூஸ் அடிகளார். புனிதையின் நல்லடக்கச்சடங்கில் மறையுரை ஆற்றுகையில், “அருட்சகோதரி அல்போன்சாவின் ஆன்மீக வாழ்வைக் குறித்து அதிகமாக அறிந்திருக்கும் நபர் என்னும் முறையில், என்னால் ஒன்றை உறுதியாகக் கூற முடியும். நாம் இன்று ஒரு புனிதையின் நல்லடக்கச் சடங்கில் பங்கேற்கிறோம். இவரின் ஆன்மீக வாழ்வைக் குறித்தும் அவர் கொண்டிருந்த புனிதத்தைக் குறித்தும் வெளியுலகிற்குத் தெரிந்திருந்தால், இன்றைய இச்சடங்கில் ஆயிரக்கணக்கான குருக்களும் அருட்சகோதரிகளும் பொது நிலையினரும் பங்கேற்றிருப்பார்கள். அவர்கள் இப்புனிதையின் முகத்தை ஒருகணம் காண்பதற்காக முண்டியடித்திருப்பார்கள். அவரிடமிருந்து புனிதமான பொருள் ஒன்று வேண்டும் என்று ஆவல் கொண்டு வந்திருப்பார்கள். மனித கணிப்பின்படிப் பார்த்தால், இவர் குழந்தைத் தெரசா என்னும் புனிதைக்கு நிகரான வாழ்வு வாழ்ந்தார் என்று என்னால் உறுதியாக கூறமுடியும்” என்று கூறினார்.

அல்போன்சா சிறுவயதில் அன்னக்குட்டி என அழைக்கப்பட்டார். நன்மைகளால் சூழப்பட்ட அவரது இளமைக்காலம் துன்பங்களிலே அடங்கியிருக்கும் இனிமையையும், புண்ணிய வாழ்வின் மேன்மையையும் கற்றுக்கொடுத்தது. சீரோ மலபார் கிறிஸ்தவர்களிடையே காணப்படும் கிறிஸ்தவ வாழ்வின் கலாச்சாரக் கூறுகள் அன்னக்கூட்டிக்கு பேருதவியாக அமைந்தன. ஆகஸ்ட் 19, 1910 இல் பிறந்த அன்னக்குட்டி, தமது தாயை மூன்றாம் மாதத்தில் இழந்தார். இறக்கும் போது, அத்தாய், தனது பாசத்திற்குரிய மகளை, தனது சகோதரி அன்னம்மா முரிக்கன் அவர்களின் பராமரிப்பில் விட்டார். அன்னக்குட்டியை முறையாக வளர்த்து, நல்ல குடும்பப் பெண்ணாக மாற்ற வேண்டும் என்று ஆசைப்பட்ட அவரது தந்தை, மகள் சித்தியின் வீட்டில் வளர்வதே சரியானது என எண்ணினார். ஒழுக்கமுடன் அன்னக்குட்டியை வளர்ப்பதில் தனிக்கவனம் செலுத்தினாள் அன்னம்மா முரிக்கன். கிறிஸ்துவின் அன்பை

ஊட்டிவளர்ப்பதற்கான அனைத்துச் சூழலும் அக்குடும்பத்தில் நிலவியது. மாலை செபம், வாராந்தர உபவாசம், நற்கருணை பக்தி, திருப்பலியில் பங்கேற்றல் ஆகியவற்றை வழக்கமாக்கிக் கொண்டாள் அன்னக்குட்டி.

இளம் பருவம் கொடுத்த ஒழுக்க வாழ்வு பரணங்ஙானம் கன்னியர் இல்லத்தில் அன்னக்குட்டிக்கு பேருதவியாக இருந்தது. கன்னியர் இல்ல வாழ்வில் அவர் துன்பங்களையும் வலிகளையும் அன்புடன் ஏற்றுக்கொண்டார். ஈசோவின் பாடுகளில் பங்கேற்க ஆசைப்பட்ட அவர், தூய வாழ்வு வாழ துன்பங்களும் துயரங்களும் இன்றியமையாதவை என்பதை அறிந்திருந்தார். "திருச்சபையாகும் உடலின் ஒட்டுமொத்த நலனுக்காக துயரங்கள் தரப்படுகின்றன. கிறிஸ்தவர்கள் துன்பங்களை மனமுவந்து ஏற்கும் போது, திருச்சபைக்காக பாடுகளை ஏற்ற மெசியாவின் துன்பங்களில் பங்கேற்கிறார்கள், அவ்வாறே அவரது பாடுகளில் குறைபடுவதை நிவர்த்தி செய்கிறார்கள். அவற்றை மகிழ்ச்சியோடு ஒருவர் ஏற்கும் போது, கிறிஸ்துவின் மீட்புப்பணியில் அவர் பங்கேற்கிறார்" என்னும் கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி நூலின் படிப்பினை ஆனது அல்போன்சாவின் வாழ்வில் செயலாக்கம் பெற்றது.

துன்பங்களைக் குறித்த புனித அல்போன்சாவின் படிப்பினைகள், துன்பங்கள் கொண்டுள்ள மீட்பின் இயல்புகளை வெளிப் படுத்துகின்றன. "துன்பங்களும் பாடுகளுமே எனது மணமகனின் (இயேசு) வாழ்வில் பெரும்பாலும் ஏற்பட்டதால் நானும் அவ்வலிகளை ஏற்க மனம் கொண்டுள்ளேன். துன்பங்கள் தொடர்ந்து என்னை வதைத்தாலும், அவை மன அமைதியைத் தருவதாக உள்ளன. கடந்த ஏழு ஆண்டுகளாக துன்பங்கள் வழியாக நான் என் ஈசோவுக்கு மட்டுமே சொந்தமாக மாறிவிட்டேன்" என்கிறார் புனித அல்போன்சா.

அல்போன்சா தமது வாழ்வில் பழக்கப்படுத்திக் கொண்ட துன்பங்களின் ஆன்மீகத்தைக் குறித்து நன்கு அறிந்திருந்த திருச்சபை, அவருக்கு முத்திப்பேறு பட்டம் கொடுக்கும் போது, திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் வழியாக பின்வருமாறு கூறியது. "இளம் வயதிலேயே அல்போன்சா, பெருந்துயர்களை அனுபவித்தார். ஆண்டுகள் கடந்த போது, விண்ணகத் தந்தை தமது மகனின் பாடுகளில் பங்கேற்கும் பெரும்பேற்றை அல்போன்சாவுக்குக் கொடுத்தார். உடலளவில் அனுபவித்த வலிகள் மட்டுமல்லாமல் பிறரால் புரிந்து கொள்ளப்படாமல் இருந்த சந்தர்ப்பங்களில் உருவான உள்மன வேதனைகளையும் திருச்சபைத் தாய் காண்கிறாள். கிறிஸ்துவின் பாடுகளை அன்பு

செய்ததால் அல்போன்சாவால் துன்பங்களை அன்பு செய்யாமல் இருக்க முடியவில்லை. சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை அன்பு செய்ததன் வழியாக சிலுவைகளை அவர் அன்பு செய்தார்.

வாழ்வாக மாறும் கிறிஸ்து அனுபவம் ஒன்றே, கிறிஸ்துவின் பாடுகளை மகிழ்வோடு ஏற்கத் தூண்டும். அப்போது தான் நமது துன்பங்களை ஏற்று அவற்றை பலியாக அர்ப்பிக்கவும் முடியும். "அன்பு இயேசுவே, காயப்பட்ட உமது திருஇருதயத்தில் என்னைக் மறைத்துக் கொள்ளும். அன்பு செய்யப்படவும் மதிக்கபடுவதற்குமான எனது ஆசையை என்னிடமிருந்து நீக்கியருளும். புகழும் பெருமையும் தேடும் சோதனைகளுக்குள் விழாமல் காத்தருளும். உம்முடைய திருஇருதயத்தின் பற்றியெரியும் நெருப்பிலே ஒரு சிறு சுடராகும் அளவுக்கு என்னை எளியவளாக்கியருளும்" என அல்போன்சா செபித்தார்.

இப்பெரும் புனிதையின் விழாவினைக் ஜூலை 20 முதல் 29 வரை மறைமாவட்ட அளவில், நாகர்கோவில் அல்போன்சா திருத்தலத்தில் வைத்து கொண்டாட இருக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் நாம் செய்வதைப் போன்று இவ்வாண்டும் நீங்கள் இவ்விடத்திற்குத் திருப்பயணம் மேற்கொள்ள கேட்டுக் கொள்கிறேன். மறைமாவட்ட இளையோர்கள், வழக்கமாக மேற்கொள்ளும் நடைபயணத்தில் மிக முக்கியப் பங்கு வகிக்கிறார்கள். இப்புனித பயணத்தில் நானும் பங்கேற்பேன். அருட்தந்தையர்களோடும் அருட்சகோதரிகளோடும் என்னோடும் சேர்ந்து இப்பயணம் மேற்கொள்ள நான் உங்களை அழைக்கிறேன். இப்புனிதப் பயணத்திற்காக, உபவாசம், நவநாள் மற்றும் சிறப்பு செபங்களால் நம்மையேத் தயாரிப்போம்.

**திருநாளின் முக்கிய நிகழ்வுகள்**

ஜூலை 20: கொடியேற்றம், திருப்பலி - பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், குருகுலமுதல்வர்.

ஜூலை 21: நடைபயணம் - மறைமாவட்ட இளையோர் மற்றும் அனைத்து இறைமக்கள்.

ஜூலை 28: திருப்பலி இலத்தீன் முறை.

தலைமை : மேதகு ஆயர் சிங்கராயன், சேலம் மறைமாவட்டம்.

ஜூலை 29: மறைமாவட்ட திருப்பயண நாள் - காலை 9.30 மணிக்கு திருப்பலி, மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB.

அனைத்து இறைமக்களும் பங்கேற்க கேட்டுக்கொள்கிறேன். மறைவட்ட அளவில், திருத்தலத்திற்கு செல்வதற்கும்

இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுக்கவும் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதைப் பயன்படுத்துக் கொள்ள கேட்டுக்கொள்கிறேன். கீழே விபரம் தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஜூலை 20, 2018 | நித்திரவிளை |
| ஜூலை 21, 2018 | படந்தாலுமூடு |
| ஜூலை 23, 2018 | ஆறுகாணி |
| ஜூலை 24, 2018 | சூசைபுரம் |
| ஜூலை 26, 2018 | மஞ்சாலுமூடு |
| ஜூலை 27, 2018 | தக்கலை - பிலாங்காலை |

புனித அல்போன்சா திருவிழாவை முன்னிட்டு, புனித அல்போன்சா அக்காடமி, பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு இடையேயான போட்டிகளை ஆகஸ்ட் 4 ஆம் தேதி நடத்துகிறது.

புனித அல்போன்சா திருத்தலத்தின் பங்குதந்தை. நிகழ்வுகளைக் குறித்த விபரங்களை உங்களுக்கு எழுத்து பூர்வமாகத் தெரியப்படுத்துவார்.

மறைமாவட்டத்தின் செயல் பாடுகளில் இயன்ற அளவு ஒத்துழைப்புக் கொடுத்து செயல்படும் உங்கள் அனைவரையும் மனமார வாழ்த்துவதோடு நன்றிகளையும் தெரியப்படுத்துகிறேன்.

செபங்களையும் ஆசீரையும் அளிக்கிறேன். எனக்காகவும் மறைமாவட்டத்திற்காகவும் தொடர்ந்து செபியுங்கள்.

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்டம்

குறிப்பு: இவ்வாயர் திருமுகத்தை, 2018 ஜூலை 15 ஆம் தேதி திருப்பலிக்கிடையே பங்குகளில் வாசிக்க வேண்டும்.

### தேசிய கருத்தரங்கு

அல்போன்சா கல்லூரி கணிதவியல் துறை சார்பில் தேசிய கருத்தரங்கு ஆகஸ்டு 14 அன்று நடைபெற்றது. குமரி மாவட்டத்திலுள்ள பல்வேறு கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர். தொடக்க விழாவில் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் கலந்து கொண்டு கூர்மையான மனம் மற்றும் இரக்கமுள்ள இதயத்தை வளர்த்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி தொடக்க உரையாற்றினார். தொடர்ந்து சிறப்பு விருந்தினர்கள் நபர்கள் சிறப்புரையாற்றினர். கல்லூரிகளுக்கிடையே கணிதவியல் சார்ந்த பல்வேறு வகையான போட்டிகளும் நடைபெற்றது.

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOPS HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

# ஆயர் சுற்றுமடல்

Circular letter No/GR/10/2018 26 July 2018

ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!

இறையேசுவில் அன்பிற்குரியவர்களே,

விண்ணரசியாம் நம் தாய் கன்னி மரியாவின் பிறந்த நாளை செப்டம்பர் 8 அன்று மனமகிழ்வுடன் கொண்டாட இருக்கிறோம். இந்நாள் திருச்சபையைப் பொறுத்தமட்டில் மிக முக்கியமான திருநாட்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. பொதுவாக, இவ்வுலக வாழ்வைத் துறந்து விண்ணக வாழ்வில் நுழைந்த நாளையே புனிதர்களின் திருநாளாக திருச்சபை கொண்டாடுவது வழக்கம். ஆனால் இவ்வழக்கத்திற்கு மாறாக, இருவரின் விழாக்களை மட்டும் திருச்சபையானது, அவர்கள் இம்மண்ணகத்தில் பிறந்த நாட்களை திருவிழா நாட்களாகக் கொண்டாடுகிறது. அவர்கள் முறையே, புனித திருமுழுக்கு யோவான் மற்றும் தூய கன்னி மரியா. இதற்கு தக்கதான காரணமும் உண்டு. சாதாரணமாக, புனிதர்களின் மேன்மையானது, இவ்வுலக வாழ்வின் அடிப்படையிலேயே அளவிடப்படுகிறது. அதாவது, அவர்கள் எத்தகைய வாழ்வை இவ்வுலகில் வாழ்ந்தார்கள் என்பதை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் புனிதம் அளவிடப்படுகிறது. ஆனால், திருமுழுக்கு யோவானும் தூய கன்னிமரியாவும், கடவுளின் மீட்புப் பணியின் பகுதியாக மீட்பின் வரலாற்றில் இடம் பெறும் அழைப்பைப் பெற்றவர்களாகவே மண்ணகத்தில் பிறந்தார்கள். இதுவே அவர்களின் தனிப்பட்ட மேன்மை. மீட்பரின் வருகைக்கு பாதையை செம்மையாக்கும் அழைப்பையும் பணியையும் திருமுழுக்கு யோவான் பெற்றிருந்தார்; என்றால், தாய் கன்னி மரியாவோ, மீட்பரின் தாயாகும் அழைப்பையும் பணியையும் பெற்றிருந்தார். கன்னி மரியாவின் பிறப்பானது, மீட்பின் வரலாறோடு பின்னிப்பிணைக்கப்பட்டதாக அமைந்தது. பழைய ஏற்பாட்டு மக்களோடும் புதிய ஏற்பாட்டு மக்களோடும் தொடர்புடையகவும் அவளின் பிறப்பு அமைந்தது.

இவ்வுலகிற்கு புது நம்பிக்கையைக் கொடுக்கும் விதமாகவே ஒவ்வொரு மனிதரின் பிறப்பும் அழைப்பும் விளங்குகிறது; இது தாய் மரியாவில் பெரிதாய்

வெளிப்படுகிறது. மீட்பின் முழுமையை இயேசு கொணர்ந்தார் எனில், அதை உலகோர்க்கு உணர்த்தும் விடிவெள்ளியாய் மரியா விளங்கினார். இயேசுவின் பிறப்பு மானிடருக்கு மாபெரும் மகிழ்ச்சியை அளித்தது எனில், மரியாவின் பிறப்பும் அம்மகிழ்ச்சியின் தொடக்க நிகழ்வாய் அமைந்தது. தாய் மரியின் பிறப்பைக் கொண்டாடும் ஒவ்வொரு முறையும், இதயம் மட்டற்ற மகிழ்ச்சியில் மூழ்கி அமைதியில் நீடிக்கிறது என்பதில் ஐயமில்லை.

## எட்டுநாள் நோன்பு

தாய் மரியாவின் பிறந்த நாளைக் கொண்டாடும் விதமாக, செப்டம்பர் 1 முதல் 8 ஆம் தேதிவரை நோன்பு அனுசரிக்கும் மரபானது நமது திருச்சபையில் தொன்று தொட்டு நிலவி வருகிறது. எட்டு நோன்பு என அறியப்படும் இந்நாட்களில், சிறப்பு செபமாலைகள் ஏறெடுக்கப்படுவதோடு, இதர பக்தி முயற்சிகளும் இரக்கச் செயல்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

2018 ஆகஸ்ட் 13 ஆம் தேதியன்று, கேரளாவில் பாலா என்னும் இடத்தில், சங்ஙனாசேரி உயர் மறைமாவட்டத்தின் கீழ் வரும், சங்ஙனாசேரி, காஞ்ஞிரப்பள்ளி, பாலா மற்றும் தக்கலை மறைமாவட்டங்களைச் சேர்ந்த ஆயர்களும், மறைமாவட்டப் பிரதிநிதிகளும் ஒன்றாகக் கூடினர். இக்கூட்டத்தில் மேய்ப்புப்பணிகளைக் குறித்த மறு ஆய்வுகளும், பரிந்துரைகளும் விவாதங்களும் முன்னெடுக்கப்பட்டன. கூட்ட முடிவில், இவ்வருட எட்டு நோன்பானது, கீழ்வரும் நோக்கங்களுக்காக அனுசரிக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

- இயற்கை அழிவு ஏற்படுத்திய பாதிப்பால் துன்புறும் கேரள மாநிலத்தைச் சேர்ந்த நம்முடைய சகோதரர் சகோதரிகளுக்காகத் தொடர்ந்து செபித்தல்.
- கிறிஸ்தவ வாழ்வும் கிறிஸ்தவ சாட்சிய வாழ்வும் சவாலுக்கு உட்பட்டிருக்கும் இந்தியத் திருச்சபைக்காக தொடர்ந்து உருக்கமாக செபித்தல்.

இவ் எட்டு நோன்பின் வேளையில், மேற்காணும் நோக்கங்களை மையமாகக் கொண்டு, தனிப்பட்ட முறையிலும் சமூகமாகவும், ஆன்மீக வாழ்வை புதுப்பிக்க அனைத்து தந்தையர்களும், துறவறத்தாரும், பொதுநிலையினரும் முன்வர வேண்டும் எனவும், அதற்காக செயல்பட வேண்டும் எனவும், கேட்டுக் கொள்கிறேன். மேற்கூறிய இரு நோக்கங்களைக் குறித்து சற்று விரிவாகப் பார்ப்போம்.

## 1. கேரளாவில் பெரும் வெள்ளம் ஏற்படுத்திய நாசம்

இந்நூற்றாண்டின் பெரும் அழிவை சந்தித்திருக்கும் கேரளத்தைச் சேர்ந்த மக்களுக்காக, தக்கலை

மறைமாவட்டமானது, செபித்ததோடு, இயன்ற அளவு உதவிக்கரத்தையும் நீட்டி இருக்கிறது. 2018, ஆகஸ்ட், 20 ஆம் தேதி ஞாயிறு காணிக்கையை, இந்நோக்கத்திற்காக மறைமாவட்ட அளவில் சேகரித்தோம். அதன் தொடர்ச்சியாக, ஆகஸ்ட் 19, 2018 அன்று நிவாரணப் பணிகளுக்கான பொருட்களை (உணவு தானியங்கள், தின்பண்டங்கள், காய்கனிகள், இன்னும் பல) சேகரித்து அவற்றை, கேரளாவில் உள்ள, இடுக்கி, சங்ஙனாசேரி, மற்றும் குட்டநாடு பகுதிகளுக்கு 5 வண்டிகளில் அனுப்பி வைத்தோம். சங்ஙனாசேரிக்கான நிவாரணப் பொருளை நானே நேராகச் சென்று சங்ஙனாசேரி உயர் மறைமாவட்ட ஆயரிடம் ஒப்படைத்தேன். "எங்களது மறைத்தொண்டு மறைமாவட்டமான தக்கலை யிலிருந்து இவ்வேளையில் நாங்கள் உதவி பெறுகிறோம் என்பது எங்களுக்கு பெருமிதமாக இருக்கிறது" என்று சங்ஙனாச்சேரி பேராயர் மார் ஜோசப் பெருந்தோட்டம் அவர்களும் குருகுல முதல்வர் பேரருட் தந்தை ஜோசப் முண்டகத்தில் அவர்களும் சமூக சேவை ஒருங்கிணைப்பாளர்களான அருட்தந்தையர்களும் வியந்து நம் அனைவருக்கும் நன்றி கூறினர். நிவாரணப் பொருட்களை சேகரிக்க மறைமாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து தரப்பினரும் முழுமுனைப்புடன் செயல்பட்டார்கள் என்பது பெரும் பாராட்டுதற்குரிய விஷயம். பெருந்துயரில் இருந்த சகோதரர் சகோதரிகளின் துயர் துடைக்கும் பொருட்டு, மிக வறியவர்களும் முன்வந்தார்கள் என்பதை என்னால் கண்டுணர முடிந்தது. ஒரு ரூபாய் முதல், பெருந்தொகை வரை, துயர் துடைக்க கொடுத்து உதவிய உங்களின் நன்மனம் கடவுளின் பார்வையில் பெரிதாய் உள்ளது என்பதே உண்மை. தொடர்ந்து இன்னலில் வாடும் மக்களுக்காக செபிப்போம். அத்தோடு, மறுவாழ்வு பணிகளுக்காக இயன்றவரை உதவுவோம். மேலும் நம்முடைய குமரியின் சிலப் பகுதிகளும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன என்பதையும் நாம் மறந்திட இயலாது.

## உ. இந்தியத் திருச்சபை சந்திக்கும் சவால்கள்

இந்தியத் திருச்சபை பல்வேறு விதமான எதிர்ப்புகளையும் துன்புறுத்தல்களையும் தாக்குதல்களையும் சந்தித்துக் கொண்டிருக்கிறது. சமூக வலைத்தளங்கள் வழியாக பெருமளவில் இது அரங்கேறிக் கொண்டிருக்கிறது. சமீப காலங்களில் நடந்த சில தனிப்பட்ட நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டே இந்தியத் திருச்சபையை இழிவுப் படுத்தும் நடவடிக்கையானது மேற்கொள்ளப்படுகிறது. நம்முடைய உயர் பேராயர் மீது சுமத்தப்பட்ட பொய்க் குற்றச்சாட்டுகளையும், சில கிறிஸ்தவ நெறிக்கு ஒவ்வாத தனிப்பட்ட நிகழ்வுகளையும் சமூக வலைத்தளங்களும் காணொளி ஊடகங்களும் பெரும் தீனியாகக் கண்டு

கொண்டாடின. இரவு பகலென்ன விவாதித்து திருச்சபையை இழிவுப்படுத்தும் பணியில் ஈடுபட்டன. இவை, விசுவாசிகளின் விசுவாச வாழ்வை சற்றே அசைத்தும் பார்த்திருக்கிறது என்றே கூற இயலும். சட்டத்தின் முன் அனைவரும் சமமே. குற்றம் யார் செய்தாலும் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே திருச்சபையின் கொள்கையும் கூட. இதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், சமூக ஊடகங்கள், தனிப்பட்ட நிகழ்வுகளை தனிப்பட்ட முறையில் அணுகாமல், திருச்சபை என்னும் நிறுவனத்தையே கேள்விக்கு உட்படுத்தும் விவாதங்களாக முன்னெடுக்கின்றன என்பதே வேதனைக்குரியது. திருச்சபை கொண்டிருக்கும் புனிதத்தை இழிவுப்படுத்தி, அதன் இறைத்தன்மையை ஒழித்திட நடத்தும் மறைமுகத் தாக்குதல் என்றே இவற்றை கூற இயலும். கிறிஸ்துவின் சீடர்கள் என்னும் முறையில், செபத்திலே நாம் நீடித்து நிற்போம். விசுவாசம் வாழ்வாக்க உறுதி கொள்வோம். பெரும் அலையென தாக்குதல்கள் வரும்போது தளராது தாய்த் திருச்சபையோடு சேர்ந்து நிற்போம்.

இவ் எட்டு நோன்பின் நாட்களில் நடத்தப்படும், ஆராதனைகள், செபமாலைகள், திருப்பலிகள் என அனைத்தும் இவ்விரு நோக்கங்களையும் மையமாகக் கொண்டிட கேட்டுக்கொள்கிறேன். விசுவாசிகள் ஒவ்வொருவரும், தனிப்பட்ட முறையில், இறைவசனத்தை தியானித்தல், பாவசங்கீர்த்தனம் எடுத்தல், திருப்பலியில் பங்கேற்றல், இரக்கச்செயல்களில் ஈடுபடுதல், ஒறுத்தல் முயற்சிகளை மேற்கொள்தல் ஆகியவற்றை மிகவும் ஆர்வமுடன் செய்து இந்நாட்களை பயன்மிக்கதாக்கக் கேட்டுக்கொள்கிறேன். தாய் மரியா நம்முடைய பாதுகாவலியாக இருப்பாராக. நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகியவற்றின் மாதிரியான தாய் மரியா நமக்காக பரிந்து பேசி, நாம் ஒவ்வொருவரும் அருள்வழங்கும் வாய்க்காலாக மாறிட நமக்காகப் பரிந்து பேசுவாராக.

உங்களுக்காக்கவும் உங்களுடைய தனிப்பட்ட நோக்கங்களுக்காகவும் நான் செபிக்கிறேன். மறைமாவட்டத்தின் மேல் ஆண்டவரின் ஆசி தங்கி யிருப்பதாக.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்டம்

---

குறிப்பு: இந்த சுற்றுமடலை ஆகஸ்ட் 26ம் தேதி திருப்பலிக்குப்பின் உங்களுடைய பங்குகளில் வாசிக்க வேண்டும்.



# CATECHISM
# மறைக்கல்வி

> வாழ்வின் வழியை நான் அறியச் செய்வீர்உமது முன்னிலையில் எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு. (திருத்தூதர் பணிகள் 2 : 28)

அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

**தலைமையாசிரியர்களின் கூடுகை**

நமது மறைக்கல்வி தலைமையாசிரியர்களின் கூடுகை ஆகஸ்ட் 22 புதன்கிழமை 2.30 மணிக்கு இயக்குநர் அருட்தந்தை சனில் பந்திச்சிறைக்கல் அவர்களின் தலைமையில் கல்லுவிளை மறைக்கல்வி அலுவலகத்தில் வைத்து தூய ஆவி பாடலுடன் ஆரம்பமானது. மறைக்கல்வியின் உதவி இயக்குநர் அருட்தந்தை ஷோஜி புத்தன்புரைக்கல் அவர்களும் உடனிருந்தனர். வருகை தந்த தலைமையாசிரியர்களையும் மற்றும் அனைவரையும் இயக்குநர் தந்தை அவர்கள் வரவேற்றார்.

**திட்டமிடுதல்**

கூடுகையின் போது இந்த வருடம் நடைபெற்ற ஆண்டு விழாவைப் பற்றியும் அதன் நிறைக்குறைகள் பற்றியும் அடுத்த வருடம் ஆண்டுவிழா எவ்வாறு நடத்த வேண்டும் என்றும் கலந்தாலோசிக்கப்பட்டது. மேலும் மறைக்கல்வி நிலையங்களை மிகச் சிறந்த முறையில் ஆய்வு செய்வதற்கு இந்த வருடம் 5 புதிய ஊக்குவிப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். முதல் பருவத் தேர்வுக்கான வினாத்தாள் தயாரிப்பதற்கு ஒவ்வொரு மறைக்கல்வி நிலையங்களுக்கும் தமிழ், மலையாளம் தனித்தனியே வழங்கப்பட்டது.

**கருத்தரங்கு**

மறைக்கல்வி மாணவர்களை விசுவாசத்தில் ஆழப்படுத்துவதற்கும் மிகச் சிறந்த முறையில் மாணவர்களுக்கு மறைக்கல்வி புகட்டுவதற்கும் ஆசிரியர்களுக்கு சிறந்த பயிற்சி தேவை. அதற்காக 6 மறைவட்டங்களிலும் வைத்து கருத்தரங்கு நடத்தப்படுகிறது. அதில் அனைத்து ஆசிரியர்களும் கலந்துக் கொள்ள வேண்டும் என்றும் அந்த மறைவட்டங்களில் கலந்துக் கொள்ளாதவர்கள் ஏதாவது ஒரு மறைவட்ட கருத்தரங்கில் கலந்துக் கொள்ள வேண்டும் என்றும் இயக்குநர் தந்தை அவர்கள் கூறினார்.

**விவிலிய கலை விழா**

2018 - 2019 ஆம் ஆண்டிற்கான ஓவியம் வரைதல் மற்றும் எழுத்துப் போட்டிக்கான தலைப்புகள் அடங்கிய படிவம் வழங்கப்பட்டது. ஓரங்க நாடகத்திற்கான தலைப்பும் வழங்கப்பட்டது. மேலும் மறைவட்ட

ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நடைபெறும் தேதி, இடம் மற்றும் நேரம் அறிவிக்கப்பட்டது. அருட்தந்தை ஷோஜி அவர்கள் விவிலியத்தில் எத்தனை புத்தகங்கள் இருக்கின்றது என்பது பற்றியும், தூய ஆவியின் கொடைகள் என்ன என்பது பற்றியும் மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டும் என்றும் கூறினார்.

**மஞ்சாலுமூடு மறைவட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு**

மஞ்சாலுமூடு மறைவட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஆகஸ்ட் 26 ஞாயிற்றுக்கிழமை



பிற்பகல் 2.00 மணிக்கு திருக்குடும்ப ஆலயம் முக்கூட்டுக்கலில் வைத்து இயக்குநர் அருட்தந்தை சனில் பந்திசிறைக்கல் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. முதலில் பெயர் பதிவு நடைபெற்றது. இயக்குநர் அருட்தந்தை சனல் அவர்களும் சீனாய் தியான இல்லத்தின் இயக்குநர் அருட்தந்தை மிஜோ புத்தன்புரைக்கல் அவர்களும் குத்துவிளக்கேற்றி கருத்தரங்கை தொடங்கி வைத்தனர். உதவி இயக்குநர் அருட்தந்தை ஷோஜி புத்தன்புரைக்கல் அவர்களும் உடனிருந்தார். கருத்தரங்கிற்கு வருகை தந்த ஆசிரியர்கள் அனைவரையும் இயக்குநர் தந்தை அவர்கள் வரவேற்று உரை நிகழ்த்தினார். அதன் பின் அருட்தந்தை மிஜோ புத்தன்புரைக்கல் அவர்கள் விசுவாச பாரம்பரியத்தை பற்றியும், சிலை வழிபாடு குறித்தும் விவிலிய பகுதிகளை அடிப்படையாக கொண்டு எளிய நடையில் அனைவருக்கும் புரியும் வண்ணம் மிகச் சிறப்பாக வகுப்புகள் நடத்தினார்கள். பின் கருத்தரங்கானது சுமார் 4.00 மணியளவில் இயக்குநர் தந்தையின் நன்றியுரையுடன் இனிதே முடிவுற்றது. இறுதியில் தேனீர் வழங்கப்பட்டது.

**புதிய ஊக்குவிப்பாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | திரு. சதீஷ் | காட்டாத்துறை |
| 2. | திரு. விஜயராஜன் | மஞ்சாலுமூடு |
| 3. | திரு. சுனில் ராஜ் | பிலாங்காலை |
| 4. | திரு. சுனில் P.R | தெற்றியோடு |
| 5. | திரு. அஜீ | ஆறுகாணி |

**வாழ்த்துக்கள்**

மறைக்கல்வியின் புதிய ஊக்குவிப்பாளர்களாக பொறுப்பேற்ற அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள். சிறப்பாக பணிபுரிய இறைவன் எல்லா வித அருள் வரங்களையும் பொழியட்டும்.

நாடக தலைப்பு

விவிலிய கலைவிழா 2018 - 2019 ஆம் ஆண்டு ஒரங்க நாடகத்திற்கான தலைப்பு

| ஆண்கள் | பெண்கள் |
|---|---|
| தாவீதின் மனமாற்றம் (2 சாமு 11, 12 அதிகாரங்கள்) | யூதித் |

நடைபெறும் நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| 1 | செப்டம்பர் 10 | முதல் பருவ தேர்வுக்கான வினாத்தாள் ஒப்படைக்க கடைசி நாள் |
| 2 | செப்டம்பர் 17 | விவிலிய கலைவிழா எழுத்து போட்டிக்கான பெயர் பட்டியல் ஒப்படைக்க கடைசி நாள் |
| 3 | அக்டோபர் 14 | விவிலிய கலைவிழா மறைவட்ட எழுத்து போட்டி மறைவட்டங்களில் மதியம் 2.30 மணி முதல் 4.30 வரை |

விவிலிய கலைவிழா மறைவட்ட எழுத்து போட்டி

| SECTION | TOPICS |
|---|---|
| Sub Junior -Colouring | Bible Pictures |
| Junior - Pencil Drawing | மாற்கு 1- 5 |
| Senior - Pencil Drawing | மாற்கு 6 - 10 |
| Senior - Essay Writing | நற்செய்தி எடுத்துரைப்பதில் சமூக வலைதளத்தின் பங்கு (Social Media) |
| SupSenior - Pencil Drawing | மாற்கு 11-16 |
| SupSenior - Poetry Writing | தி.ப: 1- 10 |

**Age Limit**

| | | |
|---|---|---|
| Sub Juniors | 9 வயது வரை | 2010 ஜனவரி 31க்கு பிறகு பிறந்தவர்கள் |
| Juniors | 10 முதல் 13 வயது வரை | 2006 ஜனவரி 31க்கு பிறகு பிறந்தவர்கள் |
| Seniors | 14 முதல் 16 வயது வரை | 2003 ஜனவரி 31க்கு பிறகு பிறந்தவர்கள் |

| | | |
|---|---|---|
| Sup Seniors | 17 முதல் 20 வயது வரை | 1999 ஜனவரி 31க்கு பிறகு பிறந்தவர்கள் |

மறைவட்ட அளவில் நடைபெறும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

| நாள் | மறைவட்டம் | இடம் | நேரம் |
|---|---|---|---|
| செப்டம்பர் 02 | படந்தாலுமூடு | படந்தாலுமூடு | மதியம் 2 முதல் 4 வரை |
| செப்டம்பர் 09 | ஆறுகாணி | ஆறுகாணி | மதியம் 2 முதல் 4 வரை |
| செப்டம்பர் 23 | சூசைபுரம் | சூசைபுரம் | மதியம் 2 முதல் 4 வரை |
| செப்டம்பர் 30 | நித்திரவிளை | நித்திரவிளை | மதியம் 2 முதல் 4 வரை |

மறைவட்ட அளவில் நடைபெறும் கருத்தரங்கில் அனைத்து ஆசிரியர்களும் கலந்துக் கொள்ள அன்பாய் வேண்டுகிறேன்.

அருட்தந்தை சனில் பந்திசிறைக்கல்
இயக்குநர்

---

## BIRTHDAYS & FEASTDAYS OF REV FATHERS

| BIRTHDAYS - SEPTEMBER | |
|---|---|
| Rev. Fr. Jose Muttathupadom | 02 |
| | |
| Rev. Fr. Shoji Puthenpurackal | 23 |
| Rev. Fr. Mathew Kuzhinjalil | 28 |
| **FEASTDAYS - SEPTEMBER** | |
| Rev. Fr. Elambasserril SDB | 21 |
| Rev. Fr. Mathew Thekkekutt | |
| Rev. Fr. Matheus Robert | |
| Rev. Fr. Lijo Thekkel | |
| Rev. Fr. Mathew Mulangasserril MST | |
| Rev. Fr. Mathew Kuzhinjalil | |
| Rev.Fr. Santhosh Kayyalaparampil CMI | |



HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

## குழந்தை ஈசோ இயக்கம்

**பொறுப்பாளர்களின் கூட்டம்**

பொறுப்பாளர்களின் கூடுகையானது 11-08-2018 அன்று காலை 10 மணியளவில் கல்லுவிளை நற்செய்தி நிலையத்தில் வைத்து இயக்குநர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஒருசில சிந்தனைகள்.

* குழந்தைகளுக்கு சிறிய இறைவார்த்தைகளையும், சிறிய நல்ல செய்திகளையும் சொல்லிக் கொடுக்க வேண்டும்.
* அன்பு கொடுக்க வேண்டும்
* சிறுவயதில் கற்றுக் கொடுப்பது மனதில் நிற்கும் படியாக அமைய வேண்டும்
* மழையினால் வேதனைப்படும் மக்களுக்காக குழந்தைகளோடு சேர்ந்து ஜெபிக்க வேண்டும்
* Statistics Form October 13 தேதி அன்று அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

**பரிந்துரை ஜெபம்**

ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை பரிந்துரை ஜெபம் சொல்ல வேண்டும்.

• (ஆகஸ்டு) அனைத்து குருக்களுக்காக ஜெபிக்க வேண்டும். புனித மரிய வியானியை பற்றிக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

• (செப்டம்பர்) அனைத்து தாய்மார்களுக்காக ஜெபிக்க வேண்டும்

• (அக்டோபர்) குழந்தை இல்லாத தம்பதியர்களுக்காக ஒரு ஜெபமாலை சொல்லி ஜெபிக்க வேண்டும்.

• (நவம்பர்) இறந்தோர் களுக்காக ஜெபிக்க வேண்டும்.

• (டிசம்பர்) கருச்சிதைவு முதல் நோய் வாய்ப்படும் மக்களுக்காகவும் அனைத்து குழந்தைகளுக்காகவும் ஜெபிக்க வேண்டும்.

**மறைவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்**

| | | |
|---|---|---|
| Arukani Forane | : | Sr. Jannet |
| Manjalumoodu Forane | : | Sr. Soona |
| Nithiravilai Forane | : | Sr. Angel |
| Padanthalumoodu Forane | : | Sr. Joseena |
| Soosaipuram Forane | : | Sr. Ranimaria |
| Thuckalay- Pilankalai Forane | : | Sr. Cicy |

**அறிவிப்பு**

23-08-2018 அன்று சூசைபுரம் மறைவட்டத்திற்கான கருத்தரங்கு கிள்ளியூர் புனித தேவ மாத ஆலயத்தில் வைத்து நடைபெறும்.

அருட்தந்தை ஜோமோன் மங்கலமடத்தில்
இயக்குநர்

# சிறுமலர் MISSION LEAGUE



# மிஷன்லீக் இயக்கம்

**பொறுப்பாளர்கள் கூடுகை**

10-08-2018 அன்று காலை 9.00 மணிக்கு ஆயர் இல்லத்தில் மிஷன்லீக் இயக்க தேசிய தலைவர் மற்றும் செயலர் வருகை தந்ததன் அடிப்படையில் சாதாரண கூட்டம் கூட்டப்பட்டது. இயக்குநர் தந்தை அவர்கள் அனைவரையும் வரவேற்றார். பின்னர் தேசிய தலைவர், செயலர் இருவரும் இணைந்து, அக்டோபர் மாதம் நடைபெறும் தேசிய ஆண்டுவிழா தக்கலையில் வைத்து நடத்தவும் அதற்கு தலைமையேற்று சிறப்பிக்க மேதகு ஆயர் அவர்களை அழைத்தனர். பாசமிகு ஆயர் அவர்கள் மனப்பூர்வமாக அதற்கு சம்மதம் தெரிவித்தார். பின்னர் ஆயர் அவர்கள் பேசும் போது மறைமாவட்டத்தின் முதுகெலும்பாக நிற்கும் பக்த இயக்கங்களுள் ஒன்று சிறுபுஷ்ப மிஷன்லீக் இயக்கம். இவ்வியக்கம் வாயிலாக ஏராளமான இறையழைத்தல் விதை ஊற்றப்படுகிறது. ஆகவே அதன் வளர்ச்சிக்காக கடந்த மூன்று ஆண்டுகள் அயராது உழைத்த அருட்தந்தை ஷோஜோ அவர்களை பாராட்டி நன்றிக் கூறினார். பின்னர் ஒரு சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

- அக்டோபர் 7 ஆம் தேதி விசுவாச நடைபயணம் நடத்துதல்.
- நடைபயணம் கல்லுவிளை அன்னை தெரசா ஆலயம் முதல் பிலாங்காலை தூய குழந்தை தெரசா ஆலயம் நோக்கி நடத்துதல்.
- மதியம் 1.00 மணிக்கு தொடங்கி 3.30 மணிவரை பொதுக்கூட்டம் நடைபெறும் வகையில் வழிநடத்துதல்.
- இயக்க வளர்ச்சிக்காக பரிசுக் கூப்பன் முறையை பயன்படுத்துதல்.
- அடுத்தக் கூட்டம் செப்டம்பர் 2 ஆம்தேதி மாலை நடத்துதல்.

போன்ற தீர்மானங்களுக்குப் பின் திரு. ஞானதாஸ் அவர்கள் நன்றிக்கூற இறுதி ஆசீருடன் கூட்டமானது இனிதே நிறைவுபெற்றது.

**கருத்தரங்குகள்**

ஆகஸ்ட் 12 ஆம் தேதி மதியம் 2.00 மணியளவில் மஞ்சாலுமூடு, ஆறுகாணி மறைவட்டங்களுக்கு திருக்குடும்ப மேல்நிலைப்பள்ளி முக்கூட்டுக்கல், திருக்குடும்ப உயர்நிலைப்பள்ளி ஆறுகாணி ஆகிய இடங்களில் கருத்தரங்கு நடைபெற்றது.

**மஞ்சாலுமூடு மறைவட்டம்**

மஞ்சாலுமூடு மறைவட்டத்தில் அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். மிஷன்லீக் இயக்க தந்தை ஜாண் ஜோசப்

அவர்கள் இயக்கத்தின் நோக்கம், செயல்பாடுகள் பற்றி எடுத்துக் கூறி நிகழ்வை துவங்கி வைத்தார். பின்னர் அருட்தந்தை ஜஸ்டின் சுதீஸ் அவர்கள் பாரதமே உன் மீட்பு உன் மாந்தரில் என்ற திருதந்தை 13 ஆம் சிங்காராயரின் அறைக் கூவலை மையமாகக் கொண்டு வகுப்பு நடத்தினார். மறைவட்ட இயக்குநர் தந்தை ஜோமோன் அவர்கள் சிறுமலர் பற்றிய சிறந்த கதைகளை எடுத்துக்கூறி சிறப்புரையாற்றினார். நன்றிக் கூறி இறுதி ஆசிருடன் நிகழ்வு நிறைவுபெற்றது. சுமார் 125 பேர் கலந்துக் கொண்டனர்.

**ஆறுகாணி மறைவட்டம்**

ஆறுகாணி மறைவட்டத்தில் அருட்தந்தை டோபின் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். அருட்தந்தை தங்கச்சன் அவர்கள் இயக்கத்தின் நோக்கம், செயல்பாடுகள் பற்றி எடுத்துக் கூறி அருமையான முறையில் வகுப்பு நடத்தினர். அருட்சகோதரர்கள் அஜீ, லிஜீ ஆகியோர் பாடல்கள், விளையாட்டுகள் வழி மாணவர்களை உற்சாகப்படுத்தினார். மிஷன்லீக் இயக்க தந்தை ஜாண் ஜோசப் அவர்கள் மாணவர்களின் கடமைகள், பணிகள் பற்றி மிக அருமையாக விளக்கம் அளித்தார். பின்னர் இறுதி ஆசிருடன் நிகழ்வு இனிதே நிறைவுபெற்றது. சுமார் 65 உறுப்பினர்கள் கலந்துக் கொண்டனர்.

**நித்திரவிளை மறைவட்டம்**

26-08-2018 அன்று நித்திரவிளை மறைவட்ட உறுப்பினர்களுக்கு மதியம் 2.00 மணியளவில் மிஷன்லீக் இயக்க தந்தை ஜாண் ஜோசப் அவர்கள் தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது. நித்திரவிளை அமைப்பாளர் அனைவரையும் வரவேற்றார்கள். மறைவட்ட இயக்குநர் தந்தை தோமஸ் ஜெபனேஸ் அவர்கள் திருமுழுக்கு பெற்ற அனைவரும் நற்செய்தி அறிவிக்க கடமையுண்டு. ஆகவே கிறுஸ்துவின் மேய்ப்புப் பணியின் உறுப்பினர்களாகிய நாம் சிறுசிறு உதவிகள் வாயிலாக பெரிய மறைபரப்பு பணியாற்ற முடியும் எனக் கூறினார். அருட்சகோதரர்கள் ஆல்பின் ஜோஸ், பிரின்ஸ், அஜின் ஆகியோர் இயக்க விருதுவாக்கு அன்பு, தியாகம், சேவை, பொறுமை என்ற கருத்துக்களை மையப்படுத்தி நான்கு குழுக்களாக பிரித்து போட்டிகள் நடத்தினர். பாரதமே உன் மீட்பு உன் மாந்தரில் என்ற திருதந்தை 13 ஆம் சிங்காராயரின் அறைக் கூவலை மையமாகக் கொண்டு அடிமைப்பட்டிருக்கும் இந்தியாவை மீட்க ஜெபமாலை என்னும் ஆயுதத்தை நம் கரங்களில் ஏந்துவோம் என்று கூறினார். அருட்சகோதரி பிளவர்லெட் அவர்கள் நன்றிக் கூற மிஷன் கீதத்துடன் நிகழ்வு நிறைவடைந்தது. சுமார் 125 உறுப்பினர்கள் கலந்துக் கொண்டனர்.

அருட்தந்தை ஜாண் ஜோசப்
இயக்குநர்

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

நீ நடக்க பாதை இல்லை என்று கவலைபடாதே ! நீ நடந்தால் அதுவே பாதையாகும்.

**ஒருநாள் பயிற்சி முகாம்**

தக்கலை கத்தோலிக்க இளையோர் இயக்க தலைவர்களுக்கான ஒருநாள் பயிற்சி முகாம் 11-08-2018 சனிக்கிழமை அன்று



கல்லுவிளையில் வைத்து காலை 9.00 மணியளவில் ஆரம்பமானது.

**தொடக்க விழா**

பயிற்சி முகாமின் தொடக்கவிழா 10 மணியளவில் இறைவணக்கத்துடன் ஆரம்பமானது. துணைச் செயலர் ஜெசின் அனைவரையும் வரவேற்றார். இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தொடக்க உரையாற்றினார். மேலும் சிறப்பு விருந்தினராக திரு. குமரித்தோழன் அவர்கள் கலந்துக் கொண்டார்.

**பயிற்சிகள்**

பயிற்சி ஆனது முக்கியமான இரண்டு நோக்கங்களை கொண்டிருந்தது. கலை மற்றும் தலைமைத்துவப் பயிற்சி என்பதாக அமைந்தது. அதன் அடிப்படையில் இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டு வீதி நாடக பயிற்சியை, பறை பயிற்சியும் அளிக்கப்பட்டது. வீதி நாடக பயற்சியானது திரு. குமரிதோழன் அவர்களும் பறைப்ப யிற்சியை களரி பயிற்சியாளர்களும் வழங்கினர்.

**விவாத மேடை**

பயிற்சிக்கு பின் இயக்குநர் தந்தையோடு இணைந்து தக்கலை மறைமாவட்ட இளையோர் இயக்கத்திற்கு மறைமாவட்டத்திலிருந்தும், பங்குதளத்திலிருந்தும் எதிர்பார்க்கும் உதவிகள் மற்றும் DOCAT செயல்முறைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

**பொறுப்பாளர்கள்**

இப்பயிற்சி முகாமில் மறைவட்ட பொறுப்பாளர்கள் மற்றும் பங்களவில் உள்ள இளைஞர் இயக்க அலகு பொறுப்பாளர்கள் என சுமார் 68 பேர் கலந்துக் கொண்டார்கள்

**நன்றி**

பின்னர் செயலர் பபிஷா அவர்கள் அனைவருக்கும் நன்றிக் கூற ஒருநாள் தலைவர்களுக்கான

பயிற்சி முகாம் மாலை 4.00 மணியளவில் இனிதே நிறைவடைந்தது.

**நறுமுகிழ்**

தக்கலை மறைமாவட்ட இளையோர் இயக்கத்தின் சார்பாக புதியதாக தொடங்கப்பட்ட நறுமுகிழ் அமைப்பின் முதல் துவக்கம் கிள்ளியூர் தேவமாதா ஆலயம் அர்ச்சிப்பு விழாவில் பறை அடித்து மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களை வரவேற்றனர். அர்ச்சிப்பு, திருப்பலி மற்றும் ஜெபமாலை முடிந்தவுடன் பறை, ஒயில், லெஸ்யும் என கண்கவர் நடன நிகழ்ச்சி நடைபெற்றது.

**கேரளா மக்கள்**

தண்ணீரால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக தக்கலை



மறைமாவட்டம் ஆனது உதவிகள் செய்யும் விதமாக உணவு பொருட்கள், துணிகள், தேவையான பொருட்கள் ஆகியவை இளையோர்கள் முன்நின்று ஒவ்வொரு மறைவட்டமாக சேகரித்துக் கொண்டு அருட்தந்தையர்களோடு சேர்ந்து கொடுத்துதவினார்கள்.

## ஆறுகாணி மறைவட்டம்

**நெட்டா**

19-08-2018 அன்று காலை 10.00 மணிக்கு பாவசங்கீர்த்தனம் மற்றும் இளையோர் சமுதாயம் குறித்து இளையோர் இயக்க தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களால் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது.



தொடர்ந்து பாவசங்கீர்த்தனம் நடத்தப்பட்டது. இதற்கிடையே ஆராதனை தொடர்ந்து நடைபெற்றது. மறைவட்ட செயலர் ஷெறின் நன்றிக் கூறினார். 34 உறுப்பினர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டனர். மதியம் 12.30 மணியளவில் கூட்டமானது இனிதே நிறைவுபெற்றது.

## மஞ்சாலுமூடு மறைவட்டம்

**மாறப்பாடி**

26-08-2018 அன்று மறைமாவட்டத் தலைவர் ஜினோ அவர்களால் காலை 10.00 மணிக்கு பார்வையிடப்பட்டது. இளையோர்க்கு DOCAT , Membership Form, பறை பயிற்சி ஆகியவை குறித்து விளக்கம் அளித்தார். 11 பேர் கூட்டத்தில் கலந்துக் கொண்டனர். மறைவட்ட துணைத் தலைவர் வர்சா. துணைச்

செயலர் சந்தீப், பொருளர் சுஜித் ஆகியோர் கலந்துக் கொண்டனர். 11.00 மணியளவில் கூட்டமானது இனிதே நிறைவுபெற்றது.

முழுக்கோடு

ஆகஸ்டு மாதம் முதல் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டு நன்முறையில் செயலாற்றி வருகிறார்கள். மறைமாவட்டக் குழுவோடு இணைந்து செயல்பட 29-08-2018 அன்று மறைமாவட்டத் தலைவர் ஜினோ அவர்கள் இளையோர்களை சந்தித்து பேசினார். இளையோர்கள் தங்களால் முடிந்த ஒத்துழைப்பு தருவோம் என்று உறுதிக் கொண்டனர். மறைவட்ட துணைச் செயலர் சந்தீப் கலந்துக் கொண்டார்.

மஞ்சாலுமூடு

எளியோரின் நலனில் அக்கறை கொள்ளும் விதமாக 26-08-2018 அன்று காரோடில் அமைந்துள்ள தேவசகாயம் நல்வாழ்வு மையத்தை மாலை 5.00 மணியளவில் பார்வை



யிட்டனர். இளையோர்களும் மைய உறுப்பினர்களும் ஆடல், பாடல், ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்துதல் என ஒன்றரை மணிநேரம் செலவிட்டனர். இளையோர் சார்பாக ரூ.2000 அளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 13 இளையோர்கள் கலந்துக் கொண்டார்கள்.

**அபிஷா ஆஞ்லின்**
செயலர்

---

## இறையியல் பட்டயப் பயிற்சி

சீனாய் இறையியல் மையம் மூன்றாண்டு இறையியல் பயிற்சியை சிறப்பாக நடத்தி வருகிறது. தற்போது அருட்தந்தை முனைவர் கிறிஸ்துதாஸ் அவர்கள் இயக்குநராக செயல்பட்டு வருகிறார். 33 மாணவர்கள் தவறாமல் கலந்து கொண்டு பயின்று வருகின்றனர். விவிலியம், வழிபாட்டுமுறை, ஆலய வரலாறு, கத்தோலிக்க பாரம்பரியம் போன்றவற்றை பாடமாக கொண்டு விரைவில் ஈராண்டு பட்டயப் பயிற்சி வழங்கப்பட உள்ளது. இதற்கான அறிவிப்பு பிரசுரங்கள் அனைத்து பங்குகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மறைக்கல்வி ஆசிரியர்கள் பயனடைய வசதியாக தொடங்கப்பட உள்ள இப்பயிற்சி முதல் மற்றும் நான்காம் ஞாயிற்றுக்கிழமை மதியம் 2.30 மணி முதல் 5.30 மணி வரை நடைபெறும். எனவே மறைக்கல்வி ஆசிரியர்களை ஊக்கப்படுத்தி இப்பயிற்சியில் கலந்து கொள்ள கேட்டுக் கொள்கிறோம்.




# தக்கலை மத்திய சபை

<u>களியல் வட்டார சபை</u>

வட்டார சபை ஆண்டுவிழா

களியல் வட்டார சபை ஆண்டுவிழாவானது 26-08-2018 அன்று திரு இருதய ஆலயத்தில் வைத்து சுமார் 2.30 மணியளவில் ஆரம்பமானது. இக்கூட்டத்தில் சுமார் 30 பேர் பங்கேற்றனர். மத்திய சபையில் சகோ. ஜோண் மற்றும் சகோ. சௌந்தர்ராஜ், சகோ. மணிவண்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.

சிறப்புரை

சகோ. ஜாண் அவர்கள் வின்செந்தியர் என்னும் முறையில் சிறந்த ஒரு சிறப்புரையாற்றினார். சகோ. சௌந்தர்ராஜ் அவர்களும் சகோ. மணிவண்ணன் அவர்களும் வின்செந்தியர் குறித்து சிற்றுரை வழங்கினார்கள்.

அறிக்கை

வட்டார சபை செயலாளர் திரு. தங்கசாமி அவர்களால் அறிக்கை வாசிக்கப்பட்டு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. இறுதி ஜெபத்துடன் கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

<u>படந்தாலுமூடு வட்டார சபை</u>

புத்தாக்கத்தில் தெற்றியோடு கிளைச்சபை

தெற்றியோடு கிளைச்சபை சில ஆண்டுகளாக செயல்பாடற்று காணப்பட்டது. அருட்தந்தை ஜினு அவர்களின் வழிகாட்டலுடனும் சகோ. எட்வின்சன் அவர்களின் முயற்சியுடனும் தற்போது செயல்பட தொடங்கியுள்ளது. இதன் தலைவராக சகோ. தாமோதரன் அவர்கள் 26-08-2018 அன்று பதவியேற்றுக் கொண்டார்.

<u>நித்திரவிளை வட்டார சபை</u>

புது வீடு மந்திரிப்பு

வாறுதட்டு பகுதியில் ஒகி புயலால் வீடிழந்த ஒருவருக்கு மத்திய சபை பங்களிப்பில் வட்டார சபை மேற்பார்வையில் புது வீடு கட்டிக் கொடுக்கப்பட்டது. வீட்டின் மந்திரிப்பு 26-08-2018 அன்று அருட்தந்தை ஜோஸ் ஒட்டலங்கால்



அவர்களால் நிறைவேற்றப்பட்டது. இந்நிகழ்வில் மத்திய சபை துணைத் தலைவர் சவுந்தர ராஜன் அவர்களும், மத்திய சபை வெளிநாட்டு செய்தி தொடர்பாளர் சகோ. ராபி அவர்களும் கலந்துக் கொண்டனர். இந்நிகழ்விற்கான

அனைத்து ஏற்பாடுகளையும் வட்டாரச் சபைத் தலைவர் சகோ. ஜோஸ் அவர்கள் செய்திருந்தார்.

<u>சூசைபுரம் வட்டார சபை</u>

தியாகச் சுடர் போட்டி

தியாகச் சுடர் இதழின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவினை ஒட்டி 26-08-2018 அன்று போட்டிகள் நடத்தப்பட்டன. மறைவட்ட பங்குதந்தை பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் தொடங்கி வைத்தார். இதன் எல்லா பொறுப்புகளையும் சூசைபுரம் வட்டாரத் தலைவர் திரு. சோனிக் ரீகன் அவர்கள் கவனித்துக் கொண்டார். தியாகச்சுடர் ஆசிரியர் திரு. றாபின்சன் அவர்கள் போட்டிகளை வழிநடத்தினார்.

<u>மஞ்சாலுமூடு வட்டார சபை</u>

பணியேற்புவிழா


மஞ்சாலுமூடு வட்டார சபையின் தலைவர் பதவியேற்பானது 12-08-2018 அன்று 2 மணியளவில் மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசா ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. இவ்விழாவிற்கு வட்டார சபை ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை அகஸ்டின் தலோடில் அவர்கள் தலைமை தாங்கி புதிய பொறுப்பாளர்களுக்கு ஆசி வழங்கினார். மத்திய சபைத் தலைவர் சகோ. ஐயாத்துரை அவர்கள் அனைத்து பொறுப்பாளர்களுக்கும் உறுதிமொழி செய்து வைத்தார்.

சகோ. ஷாஜன்| செய்திதொடர்பாளர்

---

## சலேசிய சபையின் ஆயர் டென்னிஸ் பணிப்பிச்சை

சமீபத்தில் மியோ மறைமாவட்டத்தின் துணை ஆயராக நியமிக்கப்பட்ட சலேசிய சபையின் ஆயர் டென்னிஸ் பணிப்பிச்சை அவர்கள் 16 ஆகஸ்டு அன்று தக்கலை ஆயர் இல்லத்திற்கு வருகை தந்தார். அவருக்கு தக்கலை மறைமாவட்டம் சார்பாக ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து மறைமாவட்ட அருட்தந்தையர்களும் வாழ்த்துக்கள் தெரிவித்தனர். ஆயர் அவர்களோடு குழித்துறை மறைமாவட்ட ஆயர் ஜெரோம்தாஸ் சச, திருச்சி சலேசியன் மாகாண தலைவர் அருட்தந்தை ஜோசப் ஆன்றணி சச மற்றும் அருட்தந்தை அருண் ஆகியோரும் வருகை தந்தனர். குழித்துறை மறைமாவட்டத்தின் குளச்சல் பங்கைச் சார்ந்த புதிய ஆயர் அவர்கள் திமாபூர் சலேசிய மாகாணத்தை சார்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. புதிய ஆயரின் பணிசிறக்க வாழ்த்துகள்.





FAMILY APOSTOLATE

# குடும்ப நல்வாழ்வு

# இல்வாழ்வு இயக்கம்

மது அடிமைகள் மறுவாழ்வு மையம்

கல்லுவிளை மது மற்றும் மன நோயாளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்துதலும் நடைபெற்று வருகின்றன. இம்மையம் செவ்வாய், புதன், வியாழன், ஆகிய நாட்களில் காலை 10 மணிமுதல் மதியம் 1 மணிவரை செயல்படுகிறது. மது மற்றும் மன நோய்க்கு சிகிட்சை பெற்ற நோயாளிகள் நலன் பெற்றுள்ளனர். தற்போது இங்கு ஆற்றுப்படுத்தலுக்காக வந்துள்ள மாணவ மாணவிகள் நல்ல மாற்றம் பெற்று நன்முறையில் இருக்கின்றனர். இம்மையமானது இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் அட்டியில் தலைமையில் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றது.

திருமண பயிற்சி வகுப்பு

இருமாதத்திற்கு ஒருமுறை மூன்றாவது வாரம் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் பயிற்சிகள் நடைபெறும். இளையோர்க்கு பயன் உள்ளதாகவும், குடும்ப வாழ்க்கை நன் முறையில் அமையவும் இப்ப யிற்சி உதவுகிறது. இறுதி நாள் 2 மணிக்கு பெற்றோர்களுக்கான வகுப்பும் நடைபெறும்.

குறிப்பு

ஆகஸ்ட் மாதம் 17-08-2018 காலை 10 மணிக்கு ஆரம்பமாகி 19-08-2018 மாலை 4 மணிக்கு நிறைவுபெற்றது. பயிற்சி கட்டணம் ரூ.750 ஆகும்.

குடும்ப சந்திப்பு

தற்போது களியல் பங்கில் குடும்ப சந்திப்பு நிறைவடையும் தருவாயில்ஒவ்வொருஉறவியங்கள் குடும்ப சந்திப்பு நடத்தி முடிந்த உடன் உறவிய ஒருங்கிணைப்பு கூட்டம் நடைபெறும். புனித மரியன்னை ஆலய அருட்தந்தை டினு கோட்டைக்காபறம்பில் அடிகளாரின் தலைமையில் தூய ஆவி பாடல் மற்றும் ஜெபமாலையுடன் 6,7,8,9 ஆகிய உறவியங்களின் ஒருங்கிணைப்பு கூட்டம் ஆரம்பமானது. அருட்சகோதரிகளும் இக்கூட்டத்தில் கலந்துக் கொண்டனர். இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் அட்டியில் அவர்கள் ஒரு குருவின் கதையை சுட்டிக் காட்டி கடவுள் நமக்கு அனைத்தும் நன்மையாக செய்வார் என்ற கருத்தை பகிர்ந்தளித்தார். ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி மேரி ஜோயிஸ் அவர்கள் குடும்பத்தில் ஜெபம் மற்றும் ஜெபமாலை குறித்து விளக்கம் அளித்தார். 45 உறவிய மக்கள் கலந்துக் கொண்டனர்.

இறுதியாக அருட்தந்தை டினு கோட்டைக்காபறம்பில் அவர்கள் நன்றிக் கூறி நன்றிப்பாடலுடன் சுமார் 8.30 மணியளவில் கூட்டம் இனிதாக நிறைவுபெற்றது.

**மாதர் ஜோதிஸ் இயக்கம்**

2018 ஜூலை 1 அன்று தக்கலை பிலாங்காலை, ஆகஸ்ட் 12 அன்று மஞ்சாலுமூடு, ஆகஸ்ட் 19 அன்று படந்தாலுமூடு மற்றும் நித்திரவிளை, ஆகஸ்ட் 26 அன்று சூசைபுரம் ஆகிய மறைவட்ட தளங்களில் நசரேத் மீட் என்னும் பெயருடன் கருத்தரங்கு நடைபெற்றது. ஜூலை 1 அன்று தக்கலை பிலாங்காலை மறைவட்ட தளத்தில் மறைமாவட்ட மாதர் ஜோதிஸ் இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் அட்டியில் அவர்கள் தலைமையில், சி. எம். சி துறவற சபையின் தக்கலை மாகாண தலைமை அதிகாரி அருட்சகோதரி



விஜி அவர்கள் வழிகாட்டலில் குத்துவிளக்கேற்றி துவங்கப்பட்டது. எல்லா மறைவட்ட தளங்களில் சிறப்பு ஜெபமாலை வழியாக கன்னிமரியின் பரிந்துரையோடு இக்கருத்தரங்கு ஆரம்பமானது.

அதன்பின் அருட்சகோதரி அமல்பிளஸ்ஸி சி. எம். சி அவர்கள் அன்னையர்களின் சிறப்பியல்களை குறித்தும், குடும்ப வாழ்விலும் குழந்தைகளின் ஆன்மீக வளர்ச்சியிலும் அன்னையர்களின் பங்கு இன்றியமையாதது குறித்து சிறப்பாக வகுப்பு நடத்தினார்கள். அருட்சகோதரிகள் ரீஜா சி. எம். சி மற்றும் கிறிஸ்டி சி. எம். சி அவர்கள் துணையுடன் விளையாட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இதில் வயது வரம்பின்றி அனைத்து அன்னையர்களும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு பங்குகளிலிருந்து வந்த அன்னையர்களும் கருத்தரங்குகள் வழியாக தாங்கள் பெற்றுக்கொண்ட நன்மைகளை எடுத்துக் கூறினர். இறுதியில் நன்றியுரையோடு பாப்பரசர் கீதம் பாட கருத்தரங்கு இனிதே நிறைவுபெற்றது. இத்தகைய சிறப்பான முறையில் கருத்தரங்குகள் நடைபெற உதவிபுரிந்த மறைவட்ட தள மாதர்ஜோதிஸ் ஊக்குவிப்பாளர், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் குறிப்பாக மறைமாவட்ட இல்வாழ்வு இயக்கத்தின் ஆனிமேட்டர் அருட்சகோதரி ஆன்மரியா சி. எம். சி அவர்களுக்கும் உள்ளங்கனிந்த பாராட்டுகளும் நன்றிகளும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அருட்தந்தை அஜீஷ் அட்டியில்
இயக்குநர்

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

Kanyakumari Social Service Society

கோழி வளர்த்தல்

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் கோழி வளர்த்தல் எனும் ஒரு நாள் பயிற்சி முகாம் கல்லுவிளை அரங்கத்தில் வைத்து ஜுலை 27 ஆம் தேதி நடைபெற்றது. இதில் இவ்வியக்கத்தின் துணை இயக்குநர் அருட்தந்தை வினு டி ஜோசப் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அருட்தந்தை அவர்கள் பேசும் போது கோழி வளர்த்தல் என்பது மிகவும் எளிமையாக நாமே வீட்டிலிருந்த படியே செய்யலாம். இன்றைய சூழ்நிலையில் அனைத்து சத்தும் இருப்பது பால் மற்றும் முட்டை. இதனை நாம் சிறுதொழிலாக செய்ய முன்வர வேண்டும் என்று கூறினார். சிறப்பு விருந்தினராக மத்திய விலங்குகள் பல்கலைகழக பேராசிரியர் மருத்துவர் ரவிமருகன் அவர்கள் கலந்துக் கொண்டு கோழி வளர்த்தல் என்பது ஒர் கலை சரியான முறைகளில் பயன்படுத்தினால் இலாபம் ஈட்டலாம் சேவல் இல்லாமல் இருக்கும் கோழி 30 % அதிகமாக முட்டை போடும் திறன் கொண்டது எனவும் இது அதிக நாட்கள் கெட்டு போகாது எனவும் கூறினார். சிறப்பாக கோழி வளர்த்தல் அதன் வகைகள், உணவு முறைகள் மற்றும் கோழிகளை எளிதாக தாக்கும் நோய்கள் அதனை தடுக்கும் முறைகள் பற்றியும் பயிற்சி அளித்தார். இதில் 54 நபர்கள் கலந்துக் கொண்டனர்.

ஆடு வளர்த்தல்

மனோஸ் யூனிதாஸ் திட்டத்தின் கீழ் ஆடு வளர்த்தல் எனும் ஒருநாள் பயிற்சி முகாம் கல்லுவிளை அரங்கத்தில் வைத்து ஆகஸ்ட் 3 ஆம் தேதி நடைபெற்றது. இதில் இவ்வியக்கத்தின் துணை இயக்குநர் அருட்தந்தை வினு டி ஜோசப் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக மத்திய விலங்குகள் பல்கலைகழக பேராசிரியர் மருத்துவர் ரவிமருகன் அவர்கள் கலந்துக் கொண்டு ஆடு வளர்த்தலில் எளிய முறையில் இலாபம் ஈட்டும் தொழில். ஆட்டு இனம் இருவகைப்படும் செம்மறி ஆடு, வெள்ளாடு. இதில் சாதரணமாக குமரி மாவட்டத்தில் வெள்ளாடு அதிகமாக வளர்க்கப்படுகிறது. ஜமுன பாரி வகை ஆடு மிக உயரமாகவும் அதிக பால் கொடுக்கும் திறன் உடையது எனவும் உள்நாட்டு ஆடுகளான மார்வரி, கத்தியவாரி, உஸ்மான் பாடீ போன்றவை பரவலாக தமிழகத்தில் வளர்க்கப்படுகிறது. வெளிநாடு இனமான ஆல்பையன், நூகியன் மற்றும் அதிக

எடைஉடையதுமான போயர் இன ஆடுகள் தற்போது இங்கு வளர்த்தப்படுவதாக கூறினார். இதில் சிறப்பாக ஆடுகளை தேர்ந்தெடுக்கும் முறை உணவு முறை கொட்டகை அமைக்கும் முறை, உணவு முறைகள், வயது கண்டறிதல் மற்றும் ஆட்டினை எளிதாக தாக்கும் நோய்களான ஆந்திராஸ், இரத்த கழிச்சல் போன்ற நோய்களையும் அதனை தடுக்கும் முறைகள் பற்றியும் பயிற்சி அளித்தார். 54 நபர்கள் கலந்துக் கொண்டனர்.

மாடு வளர்த்தல்

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் பசு வளர்த்தல் எனும் ஒரு நாள் பயிற்சி முகாம் கல்லுவிளை அரங்கத்தில் வைத்து ஆகஸ்ட் 10 ஆம் தேதி நடைபெற்றது. இதில் இவ்வியக்கத்தின் துணை இயக்குநர் அருட்தந்தை வினு டி ஜோசப் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக மத்திய விலங்குகள் பல்கலைகழக பேராசிரியர் மருத்துவர் ரவிமுருகன் அவர்கள் கலந்துக் கொண்டு பசு வளர்த்தல் எளிய முறையில் இலாபம் ஈட்டும் தொழில். பசு இனம் நாட்டுயினம், கலப்பினம் என இருவகைப்படும். கலப்பினம் பசு வகையான ஜெர்சி மற்றும் காங்ரெஜ் இன மாடுகள் அதிக பால் கொடுக்கும் திறன் மற்றும் குறைவான கொழுப்பு உடையது எனவும் நாட்டு மாடுகளான சிகப்பு சிந்தி, சாஜ்வால், உஸ்மான் பாடி போன்றவை பரவலாக இந்தியாவில் வளர்க்கப்படுகிறது. இதில் உள்நாட்டு இனமான காங்கேயம், உம்பளாச்சேரி, பர்கூர், மற்றும் புளிக்குளம் போன்ற மாட்டு இனங்கள் தமிழ்நாட்டில் விவசாயம் தேவைகளுக்கு அதிகமாக வளர்க்கப்படுகிறது. இந்த இனம் அதிகபட்சமாக 2 லிட்டர் பால் மட்டுமே கூடியது. இந்த பால் கொழுப்பு அடர்த்தி அதிகம் புளிக்குளம் காளையினம் அழகுக்காகவும் ஜல்லிக்கட்டு காளையாகவும் வளர்த்தப்படுவதாக கூறினர். இதில் குறிப்பாக மாடுகளை தேர்ந்தெடுக்கும் முறைகள், கொட்டகை அமைக்கும் முறை, உணவு முறைகள், வயது கண்டறிதல் மற்றும் மாட்டினை எளிதாக தாக்கும் நோய்களான ஆந்திராஸ், கருசிதைவு நோய், மடிசூலை கோமாரி போன்ற நோய்களையும் அதனை தடுக்கும் தடுப்பூசி பற்றியும் பயிற்சி அளித்தார். 42 நபர்கள் கலந்துக் கொண்டார்கள்.

மருத்துவ முகாம்

கன்னியாகுமரி சமூக சேவை சங்கமும், ATSVS முன்சிறை மருத்துவமனையும் இணைந்து நடத்திய சித்த மருத்துவ முகாம் மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசா ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு புனித குழந்தை தெரசா ஆலய பங்குதந்தை அகஸ்டின்

தலோடில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் முஞ்சிறை ATSVS சித்த மருத்துவ கல்லூரி Dr. ஸ்டான்லி தோமஸ் அவர்கள் கலந்துக் கொண்டு பேசும் போது கீரை வகையில் மட்டும் 30 வகைகள் உள்ளன. இவற்றை தொடர்ந்து எடுத்து 120 வகையான நோய்கள் நம்மை நெருங்காது எனவும் கறிவேப்பிலை, சுக்கு, வெந்தயம், மஞ்சள் ஆகியவற்றை நன்றாக பொடியாக்கி தினமும் காலை மாலை இரண்டு வேளையும் உணவிற்கு பிறகு 5 கிராம் வீதம் சாப்பிட்டு வந்தால் முட்டு வலி குணமாகும் இது போல பல மருத்துவ தகவல்களை கூறினார். பின்னர் காலை 10 மணி முதல் 3 மணி வரை இலவச பரிசோதனை செய்து இலவச மருந்தும் அளிக்கப்பட்டது. இதில் 3 மருத்துவர்கள் 20 பயிற்சி மருத்துவர்கள் மற்றும் அருட்சகோதரர் அஜின் களப்பணியாளர்கள் மற்றும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என 225 பேர் கலந்து கொண்டனர்.

**கைக்கொடுப்போம் உதவுவோம்**

கேரளாவின் பல மாவட்டங்களில் கடும் மழை வெள்ளத்தால் பல குடும்பங்கள் தங்களுடைய வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டு லட்சக்கணக்கான மக்கள் நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த மக்களுக்கு தண்ணீர் தழும்புகளிலிருந்து விடுபடவும் பாதிக்கப்பட்ட மக்கள் நோய் தாக்குதலில் இருந்து விடுபடவும் கன்னியாகுமரி சமூக சேவை சங்க புனித அன்னை தெரசா தணிப்பு பாதுகாப்பு நிவாரணம் அலகு சார்பில் சுமார் ஒரு லட்சம் மதிப்புள்ள மருந்து




பொருட்கள் குட்டநாடு ஆலுவா மற்றும் அதனையொட்டி உள்ள முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு (மெடிக்கல் கிட், நாப்கின்கள், கொசுவலை, நோய் எதிர்ப்பு மருந்துகள் போன்றவை) இலவசமாக வழங்கப்பட்டன. முகாமில் கன்னியாகுமரி சமூக சேவை சங்க துணை இயக்குநர் அருட்தந்தை வினு டி ஜோசப் அவர்கள் தலைமையில் அருட்சகோதரி எமிலி CMC , உதவியாளர்கள் திருமதி சுதா மற்றும் திரு. பிரபின் ஆகியோர் உடனிருந்தனர். இந்நிகழ்வை இயக்குநர் தந்தை சஜி எலம்பாசேரில் அவர்கள் ஒருங்கிணைத்தார்கள்.

அருட்தந்தை சஜி எலம்பாசேரில்|இயக்குநர்

# அருட்சகோதரர்களிடமிருந்து...




இறை இயேசுவில்
அன்பிற்குரியவர்களே

தற்போது பெருமழையால் பாதிக்கப்பட்டு பேரழிவுக்குள்ளான கேரளா மண்ணின் மக்களை நாம் நினைவு கூர்ந்து ஜெபித்தோம். உதவிகள் பல செய்தோம். தொடர்ந்து அவர்கள் தங்கள் இயல்பு நிலைக்கு திரும்ப நாம் அவர்களை நம்முடைய ஜெபங்களில் நினைவு கூருவோம்.

**சேவை**

குந்நோத் இறையியல் கல்லூரியில் பயின்றுவரும் அருட்சகோதரர்கள் தங்கள் இன்பச் சுற்றுலாவையும் தியாகம் செய்துவிட்டு கேரளாவின் பல பகுதிகளிலும் சிறு சிறு குழுக்களாக சென்று தண்ணீரால் பாதிக்கப்பட்டவர்களின் ஊர்கள் மற்றும் வீடுகளை சுத்தம் செய்து வருகின்றனர். பிறருக்கு சேவை செய்வதே இறைவனுக்கு செலுத்தும் முதல் காணிக்கை என்றும் அவர்கள் கூறினார்கள். இந்த 5 நாள் சேவையானது அருட்சகோதரர் றோபின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**உஜ்ஜன்**

உஜ்ஜன் குருத்துவக் கல்லூரியில் ஆகஸ்ட் மாதம் 25 ஆம் தேதி ஓண விழாவானது மிகவும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இவ்வாண்டின் மாவேலியாக அருட்சகோதரர் லின்றோ தேர்ந்தெடுக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து மாலை 6.00 மணியளவில் கேரளாவில் தண்ணீரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சிறப்பு ஆராதனை நடைபெற்றது.

**தியானம்**

வெவ்வேறு இடங்களில் களப்பணியாற்றும் அருட்சகோதரர்களின் தியானம் 23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் முக்கூட்டுக்கல் தூய மரியாள் இளங்குருமடத்தில் வைத்து அருட்தந்தை ஜோஷி அவர்கள் தலைமையில் பேரருட்தந்தை அகஸ்டின் தலோடில் அவர்களால் வழிநடத்தப்பட்டது.

**களப்பணி**

மிஷன் லீக் பிள்ளைகளுக்கான ஒருநாள் கருத்தரங்கு எல்லா ஞாயிற்றுக் கிழமைகளிலும் அருட்தந்தை ஜான் ஜோசப் அவர்கள் தலைமையில் களப்பணியாற்றும் அருட் சகோதரர்களால் வழிநடத்தப்பட்டு வருகிறது.

**விபத்து**

சங்கமத்தில் களப்பணியாற்றும் அருட்சகோதரர் ஷிஜின்

அவர்கள் ஆகஸ்ட் 17 ஆம் தேதி விபத்திற்குள்ளானார். தற்போது அவரது உடல் சீராகி வருகிறது.

தேர்வு

பல்வேறு குருத்துவக் கல்லூரிகளில் பயின்று வரும் அருட்சகோதரர்கள் தங்கள் முதல் பருவ தேர்வுக்காக தங்களை தயார் செய்து வருகின்றனர்.

முக்கூட்டுக்கல் இளங்குருமடம்

சிறு சந்திப்பாக தங்கள் இல்லத்திற்கு சென்ற இளங்குருமட முதலாண்டு 9 மாணவர்களும் செப்டம்பர் 5 அன்று மறுபடியும் குருமடம் திரும்புவார்கள்.

அருட்சகோதரர் றோபின்
தலைவர்

# சீனாய் தியான இல்லம்

| செப்டம்பர் மாதம் நடைபெற இருக்கும் சிறப்பு தியானங்கள் | | |
|---|---|---|
| கண்விழிப்பு ஆராதனை | செப்டம்பர் 7, வெள்ளி இரவு 9.00 மணி முதல் காலை 5.30 மணி வரை | வழிநடத்துபவர் சீனாய் தியான குழு |
| ஜெபமாலை அபிஷேக தியானம் | செப்டம்பர் 14, வெள்ளி காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை | வழிநடத்துபவர் சீனாய் தியான குழு |
| நோய்களிலிருந்து குணமளிக்கும் தியானம் | செப்டம்பர் 22, சனி காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை | வழிநடத்துபவர் அருட்தந்தை குலசை பெலிக்ஸ் கும்பகோணம் மறைமாவட்டம் |

கிறிஸ்துவில் அன்பானவர்களே,

மேற்கண்ட தியானங்களில் கலந்துக் கொண்டு நோய்கள், பாவங்கள், சாபங்கள், கட்டுகளிலிருந்து விடுதலை பெற்று இறையாசியுடன் திரும்பிச் செல்ல அன்புடன் இயேசுவின் நாமத்தில் அழைக்கிறேன்.

அருட்தந்தை மிஜோ செபாஸ்டின்
இயக்குநர்

குறிப்பு: எல்லா செவ்வாய்கிழமைகளிலும் சீனாய் தியான இல்லத்தில் வைத்து பரிந்துரை செபம் நடைபெறும். ஆர்வமுள்ளவர்கள் கலந்துக் கொள்ளவும். ஆன்மீக வழிகாட்டுதல் மற்றும் பாவசங்கீர்த்தனமும் இதே நாளில் நடைபெறும்.

# மறைமாவட்ட கல்வி நிறுவனங்கள்

**பள்ளி அலுவலகம் அர்ச்சிப்பு**

கல்லுவிளையில் அமைந்துள்ள தக்கலை மறைமாவட்டத்திற்கு உட்பட்ட பள்ளிகளுக்கான புதிய அலுவலகமானது 28-08-2018 அன்று அனைத்து பள்ளிகளின் தாளாளர் பேரருட்தந்தை ஜோண்சிலால் மற்றும் சீனாய்



தியான இல்லத்தின் இயக்குநர் தந்தை மிஜோ அவர்கள் முன்னிலையில் கன்னியாகுமரி சமூக சேவை சங்க துணை இயக்குநர் தந்தை வினு டி ஜோசப் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது.

**நலத்திட்டம்**

அதைத்தொடர்ந்து அருட்தந்தை வினு அவர்கள் ஆசிரியர்களுக்கான நலத்திட்டத்தினை தொடங்கி



வைக்கும் விதமாக ஆசிரியர் ராஜேந்திர பாபு அவர்களுக்கு ரூ. 100000 கடன் வழங்கி தொடங்கி வைத்தார்.

## 1. திருக்குடும்ப மேல் நிலைப்பள்ளி முக்கூட்டுக்கல்

**அறிவியல் கண்காட்சி**

03-08-2018 வெள்ளிக்கிழமை அன்று அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. அறிவியல் கண்காட்சியை பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் திரு. புஷ்பராஜ் அவர்கள் திறந்து வைத்தார். மாணவர்கள் பல அரிய அறிவியல் படைப்புகளை செய்து பார்வைக்கு வைத்திருந்தார்கள். சிறந்த படைப்புகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

**சுதந்திர தின விழா**

72 வது சுதந்திர தின விழா 14-08-2018 அன்று பள்ளியில் நடைபெற்றது. விழாவில் பள்ளியின் தல நிர்வாகி பேரருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் தலைமையேற்று வாழ்த்துரை வழங்கினார்கள். பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் திரு. புஷ்பராஜ் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். இடை யிடையே மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

**சாரண சாரணிய இயக்கம்**

சாரண சாரணியர்களின் ஆளுநர் விருதுக்கான தேர்வு முகாமானது கருங்கல் பகுதியிலுள்ள வழுதலம்பள்ளம் நாஞ்சில் CBSC பள்ளிக்கூடத்தில் வைத்து நடைபெற்றது. இப்பள்ளி

யிலிருந்து 10 மாணவர்களும் ஆசிரியர் திரு. ஜஸ்டஸ் அவர்களும், ஆசிரியை திருமதி ஹெலன் பியூலால் அவர்களும் கலந்துக் கொண்டனர். தேர்வு முகாமானது 11-08-2018 முதல் 15-08-2018 வரையுள்ள 5 நாட்கள் நடைபெற்றன.

**கலைப் போட்டிகள்**

நாகர்கோவில் புனித அல்போன்சா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் வைத்து புனித அல்போன்சா அக்காடமியில் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்ற கலை போட்டிகளில் 0408-2018 அன்று எம் பள்ளி மாணவி ஸ்வீட்டிலின் ஜின்சி XII B என்பவர் கட்டுரைப் போட்டியில் கலந்துக் கொண்டு இரண்டாவது பரிசைப் பெற்றார்

## 2. புனித ஜேம்ஸ் உயர்நிலைப்பள்ளி வனியவிளை

**கற்றலின் இணைச் செயல்பாடுகள்**

**இளம் படைப்பாளர் விருது**

09-08-2018 அன்று வட்டார அளவில் நூலகம் சார்பாக நடத்திய போட்டியில் இளம் படைப்பாளர் விருது வழங்குதல் சார்பாக வட்டார அளவில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் உயர்நிலைப் பிரிவில் எம் பள்ளி மாணவி ஆர். சிபியா முதல் பரிசும் நடுநிலைப் பிரிவில் மினிஜா இரண்டாம் பரிசும் பெற்றுள்ளனர்.

**பங்கேற்பு**

10-08-2018 அன்று வட்டார அளவில் நடைபெற்ற சதுரங்க போட்டியில் எம் பள்ளி மாணவர்கள் கலந்துக் கொண்டார்கள்.

**சாரண சாரணியர் இயக்கம்**

13-08-2018 முதல் 15-08-2018 முடிய மூன்று நாட்கள் சாரண சாரணியருக்கான ராஜபுரஸ்கார் விருது தேர்வில் எம் பள்ளி யிலிருந்து மூன்று சாரணர்களும் மூன்று சாரணியர்களும் கலந்துக் கொண்டனர்.

## 3. புனித மத்தேயு நடுநிலைப்பள்ளி அண்ணிக்கரை

**கலைப்போட்டி**

04-08-2018 அன்று புனித அல்போன்சா மேல்நிலைப்பள்ளியில் வைத்து அனைத்துப் பள்ளிகள் சார்பாக கலைப்போட்டிகள் நடைபெற்றது. அதில் எம்பள்ளி மாணவர்கள் நடனப் போட்டியிலும் பேச்சுப் போட்டியிலும் கலந்துக் கொண்டனர். நடனப் போட்டிக்கு இரண்டாம் இடத்தை பிடித்து எம்பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

**Grand Parents Day**

13-08-2018 அன்று Grand Parents Day சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதில் மாணவர்களின் தாத்தா பாட்டிகளை கௌரவித்து பொன்னாடை போர்த்தப்பட்டது. நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக திரு. கே. சுகுமாரன் அவர்கள் இன்றைய சூழலில் பெற்றோர் மற்றும் முதியோர்கள் பற்றி சிறப்பாக உரையாற்றினார்.

சுதந்திர தினவிழா

ஆகஸ்டு 15 சுதந்திர தினவிழாவைகொண்டாடுவதற்காக ஆசீர் வித்யாலயா தெற்றியோடு ஆசிரியர்களின் அழைப்பை ஏற்று ஆகஸ்டு 14 அன்று 11 மணியளவில் அங்கு சென்றனர். மாற்றுத்திறனாளி மாணவர்கள் எம்பள்ளி ஆசிரியர் மற்றும் மாணவர்களை மேள தாளத்தோடு வரவேற்றனர். அதன் பிறகு அனைத்து ஆசிரியர் மற்றும் மாணவர்களும் வந்தே மாதரம் முழக்கத்துடன் பவனியாக தெற்றியோடு முதல் காட்டவிளை சென்று மீண்டும் ஆசீர்வித்யால பள்ளிவளாகத்தை அடைந்தனர். அதன் பிறகு இருப் பள்ளி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அன்றையதினம் எம்பள்ளி தலைமையாசிரியரின் பெயர் கொண்ட விழாவும் நடைபெற்றது. விழாவின் முடிவில் இனிப்புகள் வழங்கப்பட்டது. ஆகஸ்டு 15 அன்று 9 மணியளவில் பள்ளி தாளாளர் அவர்களால் கொடியேற்றப்பட்டது. பின்னர் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது.

அருட்தந்தை ஜோண்சிலால்
இயக்குநர்

## புனரமைக்கப்பட்ட கிள்ளியூர் தேவ மாதா ஆலயம்

கிள்ளியூர் தேவ மாதா ஆலயத்தின் பலி பீடம் மற்றும் மேற்கூரையின் உட்புறம் அழகான முறையில் புனரமைக்கப்பட்டது. இந்த பலிபீடத்தின் அர்சிப்பு மற்றும் ஆலயத்தின் மந்திரிப்பு ஆயர் அவர்கள் தலைமையில் ஆகஸ்டு 15 அன்று நடைபெற்றது. ஆயர் அவர் மந்திரித்து திருப்பலி நிறைவேற்றினார். மறைமாவட்ட ஆவண காப்பாளரும் கிள்ளியூர் மண்ணின் மைந்தருமான பேரருட்தந்தை



தோமஸ் சத்தியநேசன் மற்றும் பங்குத்தந்தை அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் ஆகியோரும் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். சிறப்பு விருந்தினராக சென்னையை சார்ந்த அருட்தந்தை லியோ அவர்களும் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர். மேலும் ஏராளமான அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும், இறைமக்களும் கலந்துக் கொண்டனர். மாலை 7.00 மணிக்கு அனைவரும் மெழுகுவர்த்தி ஏந்தி ஆலயத்திலிருந்து குருசடிக்கு ஆடம்பர ஜெபமாலை பவனி நடத்தினர். இப்பணியினை செவ்வனே திட்டமிட்டு செய்து முடித்த அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் மற்றும் பங்குமக்களுக்கு வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்தனர். இறுதியாக அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது.

# திருத்தொண்டு நிலைய செய்திகள்

**வெள்ளாம்பி திருத்தொண்டு நிலையம்**

2008 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட வெள்ளாம்பி திருத்தொண்டுத்தளம் ஆகஸ்டு 15 அன்று 10 ஆண்டுகளை நிறைவு செய்து 11 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. தற்போது அருட்தந்தை வினு ஜோசப் அவர்கள் இத்திருத்தொண்டுதள பொறுப்பாளராக செயல்பட்டு வருகிறார். திருப்பலி போன்ற வழிபாட்டு திருநிகழ்வுகள் திருத்தொண்டு தள உறுப்பினர் ஒருவரின் தனிப்பட்ட இல்லத்தில் வைத்து நடைபெற்று வருகிறது. சமீபத்தில் இவ்வில்லம் புனரமைக்கப்பட்டது. ஆயர் அவர்கள் ஆகஸ்டு 12 அன்று வருகை தந்து திருப்பலி நிறைவேற்றினார். தொடர்ந்து அம்மக்களோடு உரையாடி அவர்களின் தேவைகளை கேட்டறிந்தார். பல்வேறு இன்னல்களுக்கிடையிலும் மக்களின் விசுவாசம் சற்றும் தொய்வடையாமல் நிலையாக நிற்பதை பார்த்து மகிழ்ச்சி



கொள்வதாகவும் அம்மக்களின் கல்வித்தரம் மேம்படைய பல்வேறு மேம்பாட்டு நிகழ்சிகளும், உதவிகளும் செய்ய திட்டமிடப்பட்டுள்ளதையும் தெரிவித்தார். தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சங்கீதா அவர்கள் அறிக்கை வாசித்தார். திரு. கிருஷ்ணன் மற்றும் திரு. மரிய தாஸ் ஆசிரியர் ஆகியோர் சொற்பொழிவு ஆற்றினர். தொடர்ந்து தொடக்க காலம் முதல் திருத்தொண்டுபணி புரியும் திரு. மரியதாஸ் அவர்களுக்கு ஆயர் அவர்கள் வாழ்த்துகளும் பாராட்டும் தெரிவித்து பரிசு வழங்கினார். பின்னர் அன்பின் விருந்தும் நடைபெற்றது.

**செண்பகதரிசு புனித எவுபிராசியம்மா திருத்தொண்டு நிலையம்**

இத்திருத்தொண்டு நிலையம் 02.02.2017 ஆம் நாள் அருட்தந்தை தாமஸ் தக்கலை அவர்கள் தலைமையில், நெட்டா சி. எம்.

சி அருட்சகோதரிகள் மற்றும் திரு. மரியதாஸ் ஆசிரியர் ஆகியோர்களின் செயலாக்கத்தில் தொடங்கப்பட்டது. சனிக்கிழமை தோறும் செப வழிபாடு நடைபெற்று வந்தது. சில இடையூறுகள் காரணமாக இடையே தடங்கல் பிரச்சனைகள் சில நாட்கள் தடை ஏற்பட்டு மீண்டும் ஜெப வழிபாடு தொடர்ந்தது. 29.08.2017 அன்று பேருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் இத்திருத்தொண்டு நிலையத்தின் பாதுகாவலராக புனித எவுபிராசியம்மா என தக்கலை சி. எம். சி தலைமை நிலையத்தில் நடந்த திருப்பலி வேளையில் அறிவித்தார். திருச்சபையில் புனிதரின் பெயர் கொண்ட முதல் ஆலயம் என்னும் பெருமையை இத்திருத்தொண்டு நிலையம் பெற்றுள்ளது. 15.08. 2018 புதன் மாலை 7.00 மணிக்கு இவ்வாலயத்தில் நடைபெற்ற முதல் திருப்பலியை அருட்தந்தை தோமஸ் தக்கலை அவர்கள் நிறைவேற்றினார். திருப்பலியில் நெட்டா அருட்சகோதரிகள், திரு. மரியதாஸ் ஆசிரியர், திரு. ஜெயன், திரு. பால், திரு. நெல்சன் ஆகியோர் கலந்துக் கொண்டனர். திரு. மரியதாஸ் ஆசிரியர் அவர்கள் அனைவரைக்கும் நன்றி கூறினார். 29.08.2018 அன்று பங்கு பாதுகாவலின் திருவிழா கொண்டாடப்பட்டது.

### செங்கோட்டையில் புதிய திருத்தொண்டு நிலையம்

சீரோமலபார் எல்கை விரிவாக்கத்தின் பயனாக செங்கோட்டையின் சுந்தரபாண்டியபுரம் பகுதியில் அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் தலைமையில் திருத்தொண்டுப் பணியாளர்களின் செயலாக்கத்தில் புதிய திருத்தொண்டு நிலையம் தொடங்கப்பட்டது. இத்திருத்தொண்டு நிலைய இறைமக்களுக்கு செங்கோட்டை புதூர் பகுதியில் வைத்து ஜூலை 22 அன்று திருமுழுக்கு வழங்கப்பட்டது.

### திருநெல்வேலி திருத்தொண்டு நிலையம்

திருநெல்வேலி திருத்தொண்டு நிலையத்தில் பணியாற்றும் அருட்தந்தையர்கள் ஜினோய் மற்றும் அலக்ஸ் ஆகியோர் அப்பகுதியிலுள்ள சீரோமல்பார் குடும்பங்களை கண்டறிந்து, அவர்களுக்காக ஞாயிற்றுக்கிழமை தோறும் தவறாமல் திருப்பலி நிறைவேற்றி செபிக்கின்றனர். தற்போது 40க்கும் மேற்பட்டோர் தவறாமல் திருப்பலிக்கு வருகை தருகின்றனர்.

# மறைவட்ட செய்திகள்




**சூசைபுரம் மறைவட்டம்**

**தியாகச் சுடர்**

தியாகச் சுடர் என்கின்ற இருமாத இதழ் வெளிவருகின்றது. இதன் இரண்டாமாண்டு நிறைவையொட்டி மாணவர்களுக்கு கலைப் போட்டிகள் நடைபெற்றது. பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, வினாடி வினாப் போட்டி ஆகியவை 26-08-2018 அன்று APJM பள்ளியில் வைத்து நடைபெற்றது. இப்போட்டிகளில் பல்வேறு பங்குகளிலிருந்து ஏராளமானோர் கலந்துக் கொண்டனர்.

**ஆன்மீகம் மற்றும் சமூகம்**

ஆன்மீகம் மற்றும் சமூகம் சார்ந்த நிகழ்வுகளை மையமாகக் கொண்டு வெளிவருகின்ற தியாகச் சுடர் என்ற இருமாத இதழ் வழியாக மக்களுக்கு இறை அறிவையும், சமூக அறிவையும் வழங்க வேண்டும் என்ற எண்ணத்தில் இதனுடைய பணிகள் தொடர்ந்து செயல்பட வேண்டுமென்று பல மக்களாலும் கேட்டுக் கொண்டதற்கேற்ப மீண்டும் இவ்விதழ்களை பல இடங்களுக்கு கொண்டு செல்வதற்காக வழிவகை செய்ய வேண்டும் என்றும் பரிந்துரை செய்தனர்.

**போட்டிகள்**

மதியம் 2.00 மணிக்கு தொடங்கி மாலை 6.00 மணியளவில் முடிவுற்றது. இப்போட்டிகளை மறைவட்ட பங்குதந்தை பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்கள் தொடங்கி வைத்தார். இதன் எல்லா பொறுப்புகளையும் தியாகச்சுடர் ஆசிரியர் திரு. றாபின்சன் அவர்கள் கவனித்துக் கொண்டார்.

**உதவிகள்**

போட்டிகள் நடத்த உதவிகள் செய்வதற்கு சூசைபுரம் வட்டாரத் தலைவர் திரு. சோனிக் ரீகன் மற்றும் செயலர் சகோதரி ஹேமா அவர்களும் வருகை தந்து உதவிகள் செய்தனர். சூசைபுரம் பங்கு வின்செந்தியர்கள் தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் செய்து சிறப்புறச் செய்தனர்.

**கருத்தரங்கு**

26-08-2018 அன்று மாதர் ஜோதிஸ் கருத்தரங்கு நடைபெற்றது.

**பாத்திமாநகர் (குடுக்கச்சிவிளை)**

திருத்தொண்டு பணியின் தன்னார்வக் குழுவின் கூட்டம் நடைபெற்றது. ஜெபமாலையுடன் துவங்கிய கூட்டத்தை ஊக்கப்படுத்தும் வகையில் அருட்தந்தை ஜஸ்டின் சுதீஸ் அவர்கள் வகுப்பு நடத்தினார். தன்னார்வக் குழு உறுப்பினர்கள் கலந்துக் கொண்டனர்.

**மாங்கரை**

நல்லத் நாட்டுத் தலைவர்களைத் தலைவர்களை தேர்ந்தெடுத்தலுக்காக மறைமாவட்ட அளவில் ஜெரிக்கோ ஜெபம் பிலாங்காலை ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. இதில் அருட்சகோதரிகளும், கைக்காரர்களும் கலந்துக் கொண்டனர்.

**உறவிய ஆண்டு விழா**

12-08-2018 அன்று மாலை 6.00 மணிக்கு கல்லுவிளை உறவியத்தில் ஆண்டுவிழா அருட்தந்தை பிரின்ஸ் மாலியில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**சிறப்பு ஆராதனை**

19-08-2018 அன்று கேரளாவில் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக காலையில் சிறப்பு திருப்பலி நடைபெற்றது. தொடர்ந்து மாலை 7.00 மணிவரை உறவிய வாயிலாக அருட்தந்தை மற்றும் அருட்சகோதரிகள் இணைந்து நற்கருணை ஆராதனை நடத்தப்பட்டது. உறவிய அடிப்படையில் பொருட்கள் சேகரித்து வழங்கினார்கள்.

**பிலாங்கரை**

10-08-2018 முதல் 19-08-2018 வரை புனித லொரேட்டா அன்னை ஆலயத்திருவிழா நன்முறையில் நடைபெற்றது.

**பாலப்பள்ளம்**

19-08-2018 அன்று பங்கு பேரவைக் கூட்டம் அருட்தந்தை பிரின்டோ குரியாஸ் நடைபெற்றது. புதிய செயலராக திரு. எட்வின்சன் அவர்கள் தேர்வு செய்யப்பட்டார்.

**STUDY CENTRE**

STUDY CENTRE க்காக ஒரு குழு தேர்வு செய்யப்பட்டது. குழு தலைவராக திருமதி கஸ்தூரி தேர்வு செய்யப்பட்டார்.

**நிவாரண நிதி**

கேரளா வெள்ள நிவாரண நிதி உறவிய அடிப்படையில் வசூல் செய்யப்பட்டது. இதனை இடுக்கி மாவட்டத்திற்கு முதன் முதலாக கொண்டு சென்றதில் அருட்தந்தை பிரின்டோ குரியாக்கோஸ் பங்கு வகித்தார்.

**நித்திரவிளை மறைவட்டம்**

**அழைப்பு**

கடவுள் தந்த நன்மைகளுக்கு நாம் கொடுக்கும் நன்றியாக அமைய வேண்டும் நமது வாழ்க்கை. இறைவனில் மகிழ்ச்சி அடைந்து அவர் தந்த ஆசீர்வாதங்களுக்கு நன்றி செலுத்துவதற்காக இத்திருவிழா நாட்களில் அன்னை ஜெயமாதா நம்மை அழைக்கின்றார்.

**திருவிழா**

அன்னை மரியாவின் விண்ணேற்பு விழாவும், பங்கின் 58 வது ஆண்டு குடும்ப விழாவும் ஆகஸ்ட் 9 ஆம் தேதி முதல் 15 ஆம் தேதி வரை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இத்திருவிழாவுக்கு ஆயத்தமாக ஜீலை 31 ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 8 ஆம் தேதி முடிய நித்திரவிளை பாத்திமா மாதா குருசடியில் ஜெபமாலையும், நவநாளும் நடைபெற்றது.

**நற்செய்திக் குழு**

9 ஆம் தேதி மாலை 5.30

மணிக்கு ஜெபமாலை தொடர்ந்து பேரருட்தந்தை சனில் பந்தி சிறைக்கல் அவர்கள் திருக்கொடி ஏற்ற பேரருட்தந்தை முனைவர் கிறிஸ்துதாஸ் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார்கள். 7.30 மணிக்கு சகோ. வர்க்கீஸ் குழுவினரின் (புனித மிக்கேல் தியான இல்லம் குமுளி) நற்செய்தி பெருவிழா நடைபெற்றது. 2,3, ஆகிய தேதிகளில் அருட்தந்தை அஜீஸ் அட்டியில், அருட்தந்தைஜெபனேஷ் ஆகியோர் தலைமையில் திருப்பலி மற்றும் நற்செய்தி பெருவிழா நடைபெற்றது.

ஆயர் திருப்பலி

4 ஆம் நாள் 9.30 மணிக்கு மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் ஆடம்பர திருப்பலி மற்றும் முதல் திருவிருந்தும் நடைபெற்றது. மாலை 6.00 மணிக்கு பக்த இயக்க ஆண்டு விழா அருட்தந்தை ஜினு தெக்கேதலக்கல் தலைமையில் நடைபெற்றது.

பவனிகள்

5 ஆம் நாள் பேரருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் திருப்பலியும், அருட்தந்தை லின்ஸ்லால் அவர்கள் தலைமையில் ஆண்டுவிழா பொதுக்கூட்டமும் நடைபெற்றது. 6 ஆம் நாள் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் திருப்பலியும், அருட்தந்தை அர்னால்டு பயஸ் அவர்கள் தலைமையில் நற்கருணை ஆராதனை மற்றும் நற்கருணை பவனி நடைபெற்றது.

இராசாத் திருப்பலி

ஏழாம் நாள் காலை 7.00 மணிக்கு தேசிய கொடி ஏற்றல், 9.30 மணிக்கு பேரருட்தந்தை தோமஸ் பொளத்துபறம்பில் தலைமையில் ஆடம்பர இராசாத் திருப்பலியும் ஆலயத்தைச் சுற்றி மாதா தேர்பவனியும் மதியம் 12 மணிக்கு அன்பின் விருந்தும் நடைபெற்றது. மாலை 6.00 மணிக்கு ஜெபமாலை பவனியும் நவநாள் (பொன்விழா குருசடி) தொடர்ந்து திருக்கொடி இறக்குதல் நிகழ்வும் நடைபெற்றது. இந்நிகழ்வுகள் அனைத்தும் பக்த சபைகள், ஆசிரியர்கள், உறவியங்கள், பங்கு மக்கள் அனைவரும் சிறப்பித்து அன்னையின் அருள் பல பெற்று மகிழ்ந்தனர்.

முஞ்சிறை

அன்னை விண்ணேற்பு திருவிழா

அன்னை மரியாள் வழியாக அருளாசீர் பல பெற்று வாழ்க்கையை வளமாக்க தூய அன்னையின் விண்ணேற்பு திருவிழாவும் பாரத தாயின் விடுதலை விழாவும் ஆகஸ்டு 15 ஆம் நாள் காலை 6.30 மணிக்கு ஜெபமாலையுடன் ஆரம்பமானது. அருட்தந்தை அஜீஸ் அட்டியில் அவர்கள் சிறப்புத் திருப்பலி நிறைவேற்றி, அன்னையின் அருளும் வழிகாட்டுதலும் நம்மை இறையரசை நோக்கி பயணிக்க அழைக்கிறது. எனவே விண்ணரசை நோக்கி பயணமாவோம் மேலும் பாரத தாயின் மக்களாக வாழும் போது நாட்டின் அநீதிகளுக்கு

நம்மை ஆட்படுத்தாமல் எல்லா தீமைகளிலிருந்து விடுதலை பெற வாக்குதத்தத்தின் பெட்டகமாகிய அன்னை மரியாளின் வழியில் ஜெபமாலை என்ற கோட்டைக் கட்டி நம்மை பாதுகாக்க விண்ணக அன்னை நமக்கு வரமருள்வார் என்று வாழ்த்தினார். திருப்பலிக்குப் பின் தேசியக் கொடி ஏற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து விழா கொண்டாடி இனிப்பு உண்டு மகிழ்ந்தனர்.

**வாறுதட்டு**

தூய அன்னையின் விண்ணேற்பு விழாவும் பாரத தாயின் விடுதலை விழாவும் 15-08-2018 அன்று மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலை 7.00 மணிக்கு அருட்தந்தை ஜோஸ் ஒட்டலாங்கல் அவர்கள் தலைமையில் சிறப்பு திருப்பலி அதனைத் தொடர்ந்து 9.00 மணிக்கு தேசிய கொடி ஏற்றல் மற்றும் விழாக்கள் கொண்டாடப்பட்டது

**வயலின்கரை**

தூய அன்னையின் விண்ணேற்பு விழாவும் பாரத தாயின் விடுதலை விழாவும் 15.08.2018 அன்று மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலை 7.00 மணிக்கு பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் சிறப்பு திருப்பலி அதனைத் தொடர்ந்து 9.00 மணிக்கு தேசிய கொடி ஏற்றி இனிப்புக்கள் வழங்கப்பட்டது.

**கொண்டாட்டங்கள்**

மேலும் கிறிஸ்துராஜபுரம், சீனிவிளை பங்குகளிலும் இவ்விழாக்கள் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது.

தகவல் சேகரிப்பு : திருமதி செலின் மேரி| திருமதி ஸ்னேகலதா| திருமதி ஹேமா

## வெள்ளப் பேரழிவு நிவாரணப்பணி

கேரளாவில் ஏற்பட்ட பருவமழையின் தாக்கத்தால் பல்வேறு மக்கள் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்தனர். இலத்தீன் கத்தோலிக்க மீனவ சகோதரர்கள் ஆயிரக்கணக்கான மக்களை பாதுகாப்பாக வெள்ளத்திலிருந்து கரையேற்றினர். கிறிஸ்தவ மக்கள் தங்கள் ஆலயங்கள், கல்லூரிகள், பள்ளிகளை திறந்து அங்கே தங்கே வைத்தனர். பல்வேறு மக்களும் உணவு, உடை, மருந்துப்பொருட்கள் வழங்கினர். நமது தக்கலை மறைமாவட்டம் பல்வேறு பங்குகளிலிருந்தும், அமைப்புகளிலிருந்தும் உணவுப்பொருட்கள், மருந்துகள், ஆடைகள் சேகரித்து அருட்தந்தையர்கள் வினோத், பிரிண்டோ மற்றும் தன்னார்வ பணியாளர்களோடு இடுக்கி பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 20, 21, 22 நாட்களிலும் அருட்தந்தையர்கள் அனில்ராஜ், ஜினு தெக்கேதலக்கல், சுபின், தோமஸ் சத்தியநேசன் ஆகியோர் சங்ஙனாச்சேரி பகுதி மக்களுக்கும் உதவி செய்தனர்.

# மறைமாவட்டச் செய்திகள்



❋ அருட்தந்தை ஜோஷி புத்தன்புரைக்கல் அவர்கள் விடுமுறைக்காக ஆகஸ்டு 2 அன்று தாயகம் வந்தடைந்தார். விடுமுறைக்குப் பின் செப்டம்பர் 5 அன்று மீண்டும் ஜெர்மனி செல்ல உள்ளார்.

❋ செப்டம்பர் 2 ஆம் நாளை மறைமாவட்டம் உலக தொலை தொடர்பு தினமாக கொண்டாடுகிறது. எனவே அன்று ஆலயங்களில் எடுக்கப்படும் ஞாயிறு காணிக்கை மாதா தொலைக்காட்சியின் வளர்ச்சிக்காக வழங்கப்படும்.

❋ இவ்வாண்டு துறவற சங்கமம் செப்டம்பர் 29 அன்று பிலாங்காலை சிறுமலர் ஆலயத்தில் வைத்து நடைபெறும். துறவற அருட்பொழிவில் வெள்ளிவிழா மற்றும் பொன்விழா காணும் துறவறத்தார் ஆயர் அவர்களால் கௌரவிக்கப்படுவர்.

❋ ஆகஸ்டு மாதம் நடைபெற இருந்த சீரோமலபார் ஆயர் பேரவை கூடுகை கேரளா வெள்ளப் பேரிடர் காரணமாக ஜனவரி மாதத்திற்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

❋ பெனடிக்டன் துறவற சபையில் இணைந்த அருட்தந்தை மாத்யூ குழிஞாலில் அவர்கள் மறுபடியும் மறைமாவட்டத்தின் நிரந்தர உறுப்பினராக இணைந்துள்ளார். அருட்தந்தை அவர்கள் தற்போது முக்கூட்டுக்கல் இளங்குருத்துவக்கல்லூரியின் ஆன்மீக தந்தையாக நியமிக்கப்பட்டுள்ளார்.

❋ மறைமாவட்டங்களுக்கிடையேயான கூட்டம் நவம்பர் 19 அன்று நடைபெறும். எல்லை விரிவாக்கத்தில் தக்கலை திருத்தொண்டுதளம் என்ற மையச் சிந்தனையில் நடைபெறும் இக்கூட்டத்தில் அனைத்து துறை மற்றும் பக்த இயக்க தலைவர்களும் கலந்து கொள்ள வேண்டும்.

❋ மறைமாவட்ட பொருளாதார சுமையை தாங்கும் விதமாக அருட்தந்தை மேத்யூ அவர்கள் ஆகஸ்டு 2018 முதல் கோழிப்போர்விளை தோட்டத்திலிருந்து கிடைக்கபடும் வருவாயை மறைமாவட்டத்திற்கு தர உள்ளார். இவ்வருவாய் அருட்தந்தையர்களின் மாதாந்திரபடிக்கு முதலீடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

❋ கிள்ளியூர் தேவமாதா கார்மென்ஸ் நிலைய கட்டிடம் கட்டப்பட்டு இயந்திரங்கள் நிறுவப்பட்டு தயார் நிலையில் உள்ளது. 25 பணியாளர்களோடு மேலாளர் ஒருவரும் தேர்ந்தெடுக்கப்படுக்கப்பட்டு பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இதன் மந்திரிப்பு செப்டம்பர் 16 மாலை 5 மணிக்கு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

# BISHOP'S ENGAGEMENTS SEPTEMBER 2018

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Sat | 10.00 am | Bishop House: Meeting of Mission group |
| 2 | Sun | | Thekkekara, Kerala |
| 3 | Mon | 06.00 pm | Colechal: Holy Qurbana at CMC convent |
| 4 | Tue | 06.00 pm | Kulasekaram: Holy Qurbana |
| 5 | Wed | 06.30 pm | Thuckalay: St Mary's Holy Qurbana |
| 6 | Thu | 05.00 pm | Kaliyal: Festal day Holy Qurbana |
| 7 | Fri | 06.00 \| 09.00pm | Vallavilai: Vespers at St. Mary's Church\| Kalluvilai: Night Vigil |
| 8 | Sat | 06.00 pm | Cheenivilai: Feast day Holy Qurbana >> Ernakulam |
| 9 | Sun | 11.00 am | Ernakulam: Marriage Qurbana >> Changanassery |
| 10 | Mon | 11.00 am | Paippadu: Marriage Qurbnana >> Thuckalay |
| 11 | Tue | 09.30\| 06.30pm | Curia Meeting\| Mezhacode: Holy Qurbana at FCC Prayer Bhavan |
| 12 | Wed | 10.30\| 06.00pm | Anayadi: Marriage Qurbana\| Visit to Minor Seminary |
| 13\|14 | Thu | 09.30 am | Ongoing Formation for Junior Priests\| Priests Conference |
| 15 | Sat | 11.00 am | Changanacherry, Veroor: Marriage Qurbana >> Shenkottai |
| 16 | Sun | 07.00 am | Puliyarai: Holy Qurbana and meeting Fathers and sisters. |
| | | 05.00 pm | Killyoor: Blessing and inauguration of Deva-Matha Garment Unit |
| 17 | Mon | 06.00 pm | Padanthalumoodu: Holy Qurbana at SDS convent |
| 18 | Tue | 06.00 pm | Marappady: Holy Qurbana at SH convent |
| 19 | Wed | 06.00 pm | Annikarai: Holy Qurbana at ASMI convent |
| 20 | Thu | 06.00 pm | Sithenkudiyiruppu: Holy Qurbana at CMC convent |
| 21 | Fri | 02.00 pm | Sangamam: Youth Leaders meet |
| | | 06.30 pm | Panavilai: Kodiyettu and blessing |
| 22 | Sat | 09.00 am | >> Thrissur |
| 23 | Sun | 10.00 am | Thrissur: Baptism Qurbana |
| 24-25 | Mon | | Bishop House |
| 26 | Wed | 09.30\| 05.45pm | Curia Meeting\| Malaicode: Feast day Holy Qurbana |
| 27 | Thu | 05.00 pm | Annikarai: Feast day Holy Qurbana |
| 28 | Fri | 06.00 pm | Thettivilai: Feast day Holy Qurbana |
| 29 | Sat | 10.00 am | Religious Sangamam at Pilankalai |
| | | 05.00 pm | Manjalumoodu: Festal Holy Qurbana |
| 30 | Sun | 10.00 am | Festal Qurbana at Kattathurai |
| | | 06.00 pm | Annual Retreat begins (30th – 5th Oct. 2018) |

Fr. Shoji Puthenpurackal|Office Secretary



Killiyoor Deva Matha Church
Cosecration - 15.08.2018



Vincent de Paul - Assisted House Warming
Varuthattu



Visit, Bishop Dennis Panipitchai sdb
16.08.2018



Flood Relief to Kerala,
20.08.2018



CATECHISM Seminar - Manjalumoodu Forane
26.08.2018

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570